
இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை

ஆண்டறிக்கை



எமது தொலைநோக்கு

- *இலங்கையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்*

எமது பணி

- *இலங்கையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் ஊக்குவித்தல், மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான மூலோபாயத் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடிப்படையினை வழங்குதல்*

சுருக்கப் பெயர் பட்டியல்

AAT	-	கணக்காய்வாளர்கள் சங்கம்
AD	-	நிருவாகப் பிரிவு
ATRDC	-	பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
BHC	-	தொழில்முயற்சி ஆரோக்கிய சான்றிதழ்
CDLPF	-	தோற்பொருட்கள் உற்பத்தி மற்றும் பாதணி விருத்தி நிலையம்
CEDACS	-	தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம்
CP	-	தூய்மை உற்பத்திகள்
CSC	-	பொது சேவைகள் நிலையம்
ED	-	பொறியியல் பிரிவு
EMS	-	சுற்றாடல் முகாமைத்துவ முறைமைகள்
EPC	-	மின்முலாம் பூசும் நிலையம்
EPL	-	சுற்றாடல் பாதுகாப்புச் சான்றிதழ்
EPM	-	தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்
GP	-	பசுமை உற்பத்தித் திறன்
HRD	-	மனித வள அபிவிருத்தி
HRM	-	மனித வள முகாமைத்துவம்
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
IDB	-	கைத்தொழில் அபிவிருத்தி சபை
IED	-	கைத்தொழில் பேட்டைப் பிரிவு
IEs	-	கைத்தொழில் பேட்டைகள்
ISO	-	சர்வதேச தரநியம அமைப்பு
GMP	-	சிறந்த உற்பத்தி வழக்கங்கள்
HM	-	உயர் முகாமைத்துவம்
HMI	-	மனித இயந்திர இடைமுகம்
MD	-	சந்தைப்படுத்தல் பிரிவு
MM	-	நடுத்தர முகாமைத்துவம்
MOU	-	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MOIC	-	கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு
MSMEs	-	நுண், சிறிய மற்றும் நடுத்தர் அளவிலான தொழில்முயற்சிகள்
MT	-	மெற்றிக் தொன்
NCPC	-	தேசிய தூய்மை உற்பத்தி நிலையம்
NGRS	-	தேசிய பசுமை அறிக்கையிடல் முறைமை
OHSAS	-	தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை
PD	-	திட்டமிடல் பிரிவு
PLC	-	வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி

PVC	-	பொலி வினயில் க்ளோரைட்
RDD	-	பிராந்திய அபிவிருத்திப் பிரிவு
RM	-	மூலப்பொருட்கள்
RPD & SC	-	இறப்பர் உற்பத்தி மற்றும் சேவைகள் நிலையம்
SCP	-	நிலைபேறான நுகர்வு மற்றம் உற்பத்தி
SCX	-	துணை ஒப்பந்தப் பரிமாற்றம்
SME	-	சிறிய மற்றும் நடுத்தர் அளவிலான தொழில்முயற்சிகள்
SMI	-	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள்
SLIIT	-	இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்
SLIM	-	இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம்
SLSI	-	இலங்கை தரநியம நிறுவகம்
SOR	-	ஆட்சேர்ப்பு நடைமுறை
TSD	-	தொழில்நுட்ப சேவைகள் பிரிவு
TOT	-	பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்
UNOPS	-	கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம்

உள்ளடக்கம்

நிறுவனத்தின் தோற்றப்பாடு ..... 1 - 4

நிறுவனக் கட்டமைப்பு 5

முகாமைத்துவ மீளாய்வு ..... 6 - 8

01) மீளாய்வாண்டில் முனைப்பாக காணப்படும் செயற்பாடுகள் ..... 9 - 11

02) செயலாற்றுகை மீளாய்வு ..... 12 - 14

03) தொழிற்பாட்டு மீளாய்வு 15

3.1) நிருவாகப் பிரிவு ..... 16 - 17

3.2) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு ..... 18 - 23

3.3) திட்டமிடல் பிரிவு ..... 24 - 25

3.4) சந்தைப்படுத்தல் பிரிவு ..... 26 - 28

3.5) கைத்தொழில் பேட்டைப் பிரிவு ..... 29 - 34

3.6) பொறியியல் பிரிவு ..... 35 - 37

3.7) தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் ..... 38 - 39

3.8) தொழில்நுட்ப சேவைகள் பிரிவு ..... 40 - 46

3.9) தோற்பொருட்கள் உற்பத்தி மற்றும் பாதணி விருத்தி நிலையம்..... 47 - 48

3.10) இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம்..... 49 - 51

04) நிதி மீளாய்வு 52

- விரிவான நிதிநிலைக் கூற்று 53
- விரிவான வருமானக் கூற்று 54
- உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று 55
- காசுப் பாய்வுக் கூற்று 56
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் ஏனைய தெளிவுபடுத்தற் தகவல்களும் ..... 57 - 81

05) நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் மீளாய்வு ..... 82 - 90

1.0 நிறுவனத்தின் தோற்றப்பாடு

1.1 சட்டரீதியிலான வடிவம்

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை 1957ஆம் அண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் முதலாவதாக 1966ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. பின்னர் 1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்க் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் தற்போதைய வடிவத்தில் கூட்டிணைக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு இலங்கையின் கைத்தொழில் பிரிவினை அபிவிருத்தி செய்யும் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளது

1.2 சபையின் குறிக்கோள்கள்

1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளவாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், முன்னேற்றுதல் போன்றவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- இந்நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறைகளுக்குச் சொந்தமான அனைத்துக் கைத்தொழில் முயற்சிகளுக்கும் உரிய ஒருங்கிணைப்பும் மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய வளர்ச்சிகளுக்கு ஒத்துழைப்பும் வழங்குதல்
- இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல், கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல் அத்துடன் உள்நாட்டுக் கைத்தொழிலுக்குப் பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை விருத்தி செய்தல், உருவாகும் கழிவுகளை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான செயன்முறைகளையும் நடைமுறைகளையும் தயாரித்தல் ஆகிய குறிக்கோள்களுடன் கைத்தொழில் ஆராய்ச்சியினை ஊக்குவித்தல்
- உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்தியினை வெளிநாட்டுச் சந்தைக்கு எற்றுமதி செய்வதனை மேம்படுத்துதல்
- கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான அல்லது சாதகமானவாறு சர்வதேச சந்தை மற்றும் வலய ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்
- மூலதனம் மற்றும் கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் அத்துடன் தொழில்நுட்ப வசதிகள், சட்ட ஆலோசனைகள் வழங்குதல் உள்ளிட்ட இலங்கையிலுள்ள எந்தவொரு கைத்தொழில் முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் நிறுவனத்திற்கும் அவற்றிற்கு ஏதுவாகத் தேவையாக இருக்கின்ற அனைத்து வகைகளிலுமான வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல்

.

1.3 சபையின் பிரிவுகளும் சபையினால் வழங்கப்படும் சேவைகளும்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறைகளுக்குச் சேவைப் பொதியினை வழங்குவதற்கு இச்சபை ஒன்பது பிரிவுகளையும், தோற்பொருட்கள் மற்றும் இறப்பர் ஆகிய பிரிவுகளுக்காகவே பணியாற்றுகின்ற இரண்டு நிலையங்களையும் கொண்டுள்ளது.

(1) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

(2) திட்டமிடற் பிரிவு

(3) சந்தைப்படுத்தற் பிரிவு

(4) கைத்தொழிற் பேட்டைப் பிரிவு

(5) பொறியியல் பிரிவு

(6) தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம்

(7) தொழில்நுட்ப சேவைகள் பிரிவு

(8) நிதிப் பிரிவு

(9) நிர்வாகப் பிரிவு

(10) தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்திப் பிரிவு

(11) இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் பிரிவு

25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பு பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கீழ் தொழிற்படுவதுடன் 19 தொழிற் பேட்டைகள் கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் கீழ் செயற்படுகின்றன. பொறியியல் பிரிவின் கீழ்ச் செயற்படுகின்ற இரண்டு சேவை நிலையங்கள் உள்ளன. தொழில்நுட்ப சேவைப் பிரிவு, பொறியியல் பிரிவு, தோற் பொருள் அபிவிருத்தி நிலையம் மற்றும் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி நிலையம் உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு தேவையான தொழில்நுட்பம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகளை வழங்குதல் இவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. கைத்தொழில் அபிவிருத்திச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 714 ஆக இருப்பதுடன் அது 11 பணியாளர் பிரிவு மட்டத்துடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.4 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள்/கைத்தொழில்களுக்காக வழங்கப்படும் பிரதான சேவைகள் மற்றும் வசதிகள்

- கைத்தொழில்களுக்கான முகாமைத்துவ பயிற்சி மற்றும் மதியுரை சேவைகள்
- தொழில்முயற்சி அபிவிருத்தி
- கைத்தொழில் தகவல்கள் மற்றும் இணையத்தள வசதிகள்
- உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி
- சந்தைப்படுத்தல் உதவிகளையும் வசதிகளையும் வழங்குதல்
- பொறியில் சேவைகள்
- கைத்தொழில்களுக்கான வாய்ப்புகளை இனங்காணுதல்
- தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பத்தை வழங்குதல்
- தொழில்முயற்சிகளுக்கான சாத்தியவள ஆய்வுகள்
- பொறியியல், வேலைத்தள மற்றும் வார்ப்பு வேலைத்தள சேவைகள்
- கைத்தொழில் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- உற்பத்தி மற்றும் பொருட்களை பரிசோதித்தல்
- இயந்திரோபகரண மதிப்பீடு

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை - 2018

தலைவர்

திரு.மஹிந்த ஜினசேன	-	(2018 சனவரி முதல் ஒக்டோபர் வரை)

பதவி வழியில் நியமனம் பெறுகின்றவர்கள்

திருமதி சந்தியா விஜயபண்டார	-	(2018 சனவரி முதல் பெப்ரவரி வரை)
திரு.எஸ். பாலசுப்ரமணியம்	-	(2018 மே முதல் ஒக்டோபர் வரை)
திரு. எம்.என்.டீ.குணரத்ன	-	(2018 சனவரி முதல் பெப்ரவரி வரை)
திரு.டி.என். ஒசேன்	-	(2018 ஆகஸ்ட் முதல் ஒக்டோபர் வரை)


சபையின் ஆலோசகர்

திரு.ரோய் ஜயசிங்க	-	(2018 சனவரி முதல் ஒக்டோபர் வரை)

சபையின் அங்கத்தவர்கள்

திரு.கலீல் ரஹுமதுல்லா	-	(2018 சனவரி முதல் ஒக்டோபர் வரை)
திரு.ஷமின் பெரேரா	-	(2018 சனவரி முதல் ஒக்டோபர் வரை)
திரு.நிஷத கமகே	-	(2018 சனவரி முதல் ஒக்டோபர் வரை)
திரு.பீ.எம்.பீ.மென்டிஸ்	-	(2018 சனவரி முதல் ஒக்டோபர் வரை)
திரு.சஞ்சீவ திக்வெல்ல	-	(2018 சனவரி முதல் மே வரை)
திரு. சந்துன் எஸ்.கே.கமகே	-	(2018 செப்டெம்பர் முதல் ஒக்டோபர் வரை)
திரு.எம்.எல்.ஏ.அமீர்	-	(2018 செப்டெம்பர் முதல் ஒக்டோபர் வரை)

தாபன கட்டமைப்பு


தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை
உள்ளகக் கணக்காய்வவாளர்
பணிப்பாளர் சபைச் செயலாளர்
பணிப்பாளர் நாயகம்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழிற்பாடு)
பணிப்பாளர்- நிர்வாகம்
பணிப்பாளர் - நிதி
பணிப்பாளர் - திட்டமிடல்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)
பணிப்பாளர் – பிராந்திய அபிவிருத்தி
பணிப்பாளர் – கைத்தொழிற் பேட்டை
பணிப்பாளர் – தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிலையம்
பணிப்பாளர் – பொறியியல்
பணிப்பாளர் – தொழில்நுட்ப சேவைகள்
பணிப்பாளர் - சந்தைப்படுதத்ல்

முகாமைத்துவ மீளாய்வு



பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

இலங்கையின் கைத்தொழில் துறை பொருளாதாரத் துறை வேண்டி நிற்கும் மிகவும் உயர்ந்த அளவிலான பங்களிப்பு, மிடுக்கான உற்பத்தியின் போது நவீன தொழில்நுட்பத்தின் போக்குகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல், உற்பத்தி கிரயம், தரம் மற்றும் அளவு போன்ற விடயங்கள் தொடர்பான அளவுகோல்களுக்கு அமைவாக நீண்டகால நிலைபேறான தன்மையை பேணிவருதல் போன்ற கரிசனைகள் தொடர்பான பல்வேறு விதமான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. ஆகவே உலகம் முழுவதும் காணப்படும் கைத்தொழில்களை நான்காவது கைத்தொழில் புரட்சி யுகத்திற்கு நகர்த்தி உலகளாவிய கைத்தொழில் சூழலுக்குள் பாரியதொரு தொழில்நுட்ப மாற்றம் நிகழ்ந்து வருவதால் உடனடியாக ஆக்க பூர்வமான அணுகுமுறை நடவடிக்கைகளை ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

இச்சூழமைவின் கீழ் உற்பத்தி மற்றும் அதனைச் சார்ந்த செயன்முறைகளின் தரம், தொழிற்படுத்தல் வினைத்திறன், தொழில் முயற்சியின் விரிவாக்கம், தொழில்நுட்ப உள்ளீடு, வழங்கள் தொடரின் முகாமைத்துவம், அதன் துணைச் சேவைகள் போன்றவற்றிற்கு ஏதுவான நிலையான தன்மை மற்றும் சந்தை போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு கைத்தொழில்களுக்கான கொள்கைகள் மற்றும் மூலோபாய அணுகுமுறைகளை மறுசீரமைத்தல் அவசியமாக அமைகின்றது. ஆகவே, தேவையான மாற்றங்களை மேற்கொள்ளும் பொருட்டு இச் செயன்முறைக்கு வசதிகளை வழங்கும் விடயத்தில் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு பாரியதொரு பொறுப்பு சாட்டப்பட்டிருப்பதால் உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறைக்கு சேவைகளை வழங்கும் போது சபையின் மூலோபாயங்களை மீள் வரைவிலக்கணப்படுத்த வேண்டியுள்ளது.

இந்த அபிப்பிராயத்திற்கு சமாந்தரமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் நவீன தொழில்நுட்ப உள்ளீடுகளுடன் கூடியதாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை கட்டியெழுப்பி, பசுமை தொழில் முயற்சிக்காக நுண் சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு வசதிகளை வழங்கி அவற்றை ஊக்கப்படுத்தி நிரல் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய மட்டத்திலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு செயலூக்கமிக்க பணியை மேற்கொண்டு, கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளின் தாக்கத்தை ஒருங்கிணைக்கும் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் சபையானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்பிக்கொள்ளுதல் தொடர்பாக கவனம் செலுத்துவதை தீவிரப்படுத்தியது. மேலும் நவீன தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்திக்கொண்டு கைத்தொழில் துறையில் இற்றைவரை பயன்படுத்திக்கொள்ளப்படாத வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவன ரீதியிலான தொடர்புகளை கட்டியெழுப்பிக் கொள்ளும் பொருட்டு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் நவீன உபகரணங்களுடன் நவீன அறிவினையும் பயிற்சியினை வழங்குவதன் ஊடாக பணியாளர்களை ஊக்குவித்து நிறுவன வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள ஆற்றல் கிட்டியது.

மேலும் டிஜிட்டல் பொருளாதாரத்தில் உள்நாட்டு கைத்தொழில்களை நவீன அபிவிருத்திகளுடன் இணைக்கும் செயன்முறைக்கு உதவி வழங்குதல் தொடர்பாக இவ்வருடத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்கமைவாப கைத்தொழிலாளர்களின் சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளின்

எல்லைகளை விரிவாக்கும் பொருட்டு கைத்தொழிலாளர்களுக்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இவ்விடயம் கைத்தொழிலாளர்கள் அவர்களின் பூகோள எல்லைகள் காரணமாக ஏற்படுகின்ற மட்டுப்பாடுகளை இயன்றளவு குறைத்து தங்களது சந்தை விரிவாக்கத்தை முன்னேற்றிக் கொள்வதற்கு உதவி அளிக்கின்றது. இந்த சந்தைப்படுத்தல் சந்தர்ப்பங்களின் வாயிலாக கைத்தொழிலாளர்களுக்கு தங்களது தொழில் முயற்சிகளில் மிகவும் சிறந்த செயலாற்றுகை அடைந்து கொள்வதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் புதிய மற்றும் பல்வகைமையினைக் கொண்ட நுகர்வோர் அடிப்படையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு வழிகோலுகின்றது.

அதுமாத்திரமன்றி, பயிற்சியை வழங்கும் போதும் உற்பத்தி மற்றும் செயன்முறை விருத்தியை மேற்கொள்ளும் போதும் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் இறப்பர் துறையில் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளை ஒருங்கிணைக்கும் நோக்குடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபை இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக, பசுமை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமாந்தரமாக தெரிவு செய்யப்பட்ட சில தொழிலாளர்களுக்கு ISO 14000 சான்றிதழை பெற்றுக் கொண்டு அவர்களின் கைத்தொழில்களை கட்டியெழுப்புவதற்கான முன்னோடி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

உள்நாட்டு கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்திற்கு பதிலாக புதிய தொழில்நுட்பத்தை பதிலீடு செய்து மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதற்கமைவாக CERA கருத்திட்டம் கட்டுநிருமாணத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு கட்டமைப்பினை பெரும்பாலும் நிறைவு செய்துள்ளது. இது உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளின் தரம் மற்றும் கிரயம் தொடர்பான அளவுகோல்களை மேம்படுத்தி உள்நாட்டு கைத்தொழில்களின் செயலாற்றுகையை உயர்த்துதல் அக்கைத்தொழில்களுக்கு ரோபோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாற்றமடையக் கூடும். இதற்கு மேலதிகமாக இந்நிலையம் அனேகமான தேசிய பிரச்சினைகளுக்கு ரோபோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளைத் தேடும் செயலூக்கம்மிக்க நிலையமாகவும் செயற்படும் என்பதுடன் நான்காவது கைத்தொழில் புரட்சியில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலகளாவிய மாற்றங்களுக்கு தயாராவதற்கு உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு வாய்ப்பினையும் ஏற்படுத்தித்தரும்.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வருடாந்த இலக்கினை பூர்த்தி செய்துகொள்வதற்கு இச்சபைக்கும் அதன் பணியாளர்களுக்கும் வழங்கிய வழிகாட்டல், ஒருங்கிணைப்பு, வசதிகள் மற்றும் ஒத்துழைப்பிற்கு நிரல் அமைச்சின் கௌரவ அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடாக உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் சபையின் நோக்கத்தினை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி தொடர்ச்சியாக ஒத்துழைப்பை வழங்கிய சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் குறிப்பாக சபையின் பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக வருடத்தில் சிறந்த நிதி ஒழுக்கம், உரியவாறு பணிகளை முகாமைத்துவம் செய்தல், சிறந்த ஒழுங்கமைப்பு முறையினைப் பேணுதல் போன்றவற்றிற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கும் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பணியாளர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பி. எல். யூ. ரத்னமலல

பணிப்பாளர் நாயகம்

01) மீளாய்வு ஆண்டில் முனைப்பாக தெரியும் செயற்பாடுகள்

1.1 சர்வதேச பாதணி மற்றும் தொல்பொருள் கண்காட்சி 2018

இலங்கை பாதணி மற்றும் தொல்பொருள் உற்பத்தியாளர்களின் அமைப்பினால் தொடர்ச்சியாக பத்தாவது தடவையாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட பாதணி மற்றும் தோல்பொருள் வர்த்தக கண்காட்சி 2018 சிறிமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் 2018 பெப்ரவரி இரண்டாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பிரதானமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு அவர்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு தேவையான அனுபவம் மற்றும் அறிவினை வழங்குதல் மற்றும் சர்வதேச வர்த்தக சந்தைக்கு நுழைவதற்கு அவர்களை ஊக்குவித்தல் ஆகியவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இத்துறையில் உள்ள கைத்தொழிலாளர்களின் ஆற்றல்களை சர்வதேச கொள்வனவாளர்களுக்கு பிரபல்யப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு பாதணி துணைப் பாகங்களை உற்பத்தி செய்கின்ற வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், மூலப்பொருள் வழங்குனர்கள் மற்றும் இயந்திரோபகரண இறக்குமதியாளர்கள் ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு வசதி வழங்கும் பொருட்டு இந்த கண்காட்சியின் ஒரு பகுதியாக கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவி பணிப்பாளர் திரு. அமரநாத் விமலசிங்கவின் தலைமையில் தோல் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையத்தினால் வடிவமைப்பு போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.





மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செய்தி சஞ்சிகை (2018 சனவரி - மார்ச்)

1.2 அங்கத்துவத்துவ வழங்கல் வைபவம் – கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் தெரண தொழில்முயற்சி சமூகம்

இந்நாட்டின் எதிர்கால சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்கள், இந்நாட்டின் தேசிய பொருளாதார அபிவிருத்தியில் செயலூக்கத்துடன் கூடிய வலுவானதொரு சக்தியாக மாற்றம் அடைவதற்கு அவர்களை வலுவூட்டும் பொருட்டு நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருக்கின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களை சென்றடைவதற்கு இலங்கையின் பொருளாதார பரிமாற்றத்துக்கு சமாந்தரமாக" தெரண - கை.அ.ச வர்த்தகக் குறியீடு சிறப்பு நிலை நிகழ்ச்சித்திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் வாயிலாக நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான விரிவான, பாரியளவிலான நுகர்வோரை சென்றடையச் செய்து கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு கைத்தொழிலாளர்களுக்கு சக்தியினை வழங்குவதற்கு இவ்விடயத்தில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து தெரண தொழில்முயற்சி சமூகத்தினால் உருவாக்கப்பட்ட அச் சமூகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் வருகைத் தந்த விசேட விருந்தினர்களினால் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்படுதல் இத்தருணத்தை மேலும் அலங்கரிக்கும் நிகழ்வாக அமைந்தது,





மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செய்தி சஞ்சிகை (2018 யூலை - செப்டெம்பர்)

1.3 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் அறிவு

டிஜிட்டல் யுகத்திற்கு முற்பட்ட காலத்தில் தொழில் முயற்சி ஒன்று தொடர்பாக விழிப்புணர்வூட்டும் முயற்சிகள் பிரதானமாக அச்சு ஊடகங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் பயன்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும் தற்போது டிஜிட்டல் ஊடகங்களை பயன்படுத்திக்கொண்டு ஒரு சில நொடிகளுக்குள் எந்த ஒரு தொழில் முயற்சி அல்லது வர்த்தகம் தொடர்பான கருத்தாக இருப்பினும் அதனை முழு உலகத்துக்கும் பிரச்சாரம் செய்ய முடியும். டிஜிட்டல் சந்தைப்படுத்தலுக்கான மிகவும் முக்கியமான அரங்கமாக அமையும் இந்த அரங்கத்தை இலங்கையில் உள்ள சிறு நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கிடையே பிரபல்யப்படுத்துவதற்கான தேவையினை புரிந்து கொண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அதுதொடர்பான கருத்தரங்கு ஒன்றை நடத்தியதுடன் அதன் பெறுபேறாக தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் பற்றி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் அச்சம் மற்றும் விருப்பமின்மையை அகற்றுவதற்கான விரிவான நோக்குடன் இத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் தொடர்பான ஒரு செயலமர்வையும் நடாத்தியது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிலாளர்களுக்கு உலகச் சந்தையை சென்றடைவதற்கு அவர்கள் கொண்டுள்ள தேர்ச்சியினை வலுவூட்டுவதற்கும் நுகர்வோரின் தேவைகளுக்கேற்ற வகையில் தங்களுடைய உற்பத்திகளையும் சேவைகளையும் உருவாக்கும் பொருட்டு விசேடமான நுகர்வோர் தொடர்பான தகவல்களை பரிமாற்றிக் கொள்வதற்கும் இந்த செயலமர்வு உதவியாக அமைந்தது. துரிதமாக வளர்ச்சி அடைந்து வரும் தொழில்நுட்ப போக்குகள் மற்றும் மிகவும் குறுகிய காலத்துக்குள் சந்தையை சென்றடையக் கூடிய வாய்ப்பு ஆகியவற்றின் காரணமாக தோற்றம் பெற்றுள்ள போட்டித்தன்மை குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் முகம் கொடுத்துள்ள பாரியதொரு தடையாகும். இந்த வகையில் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்திக் கொள்வதற்கு விருப்பத்தை காட்டாத சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு இந்தத் தடையை வெற்றி கொள்வதற்கு காணப்படும் ஒரே ஒரு முறை உரிய பயிற்சியையும் ஆலோசனையையும் பெற்றுக் கொள்வதாகும்.



மூலம்: தொழில்முயற்சி செய்திகள், டேலி நிவுஸ் பத்திரிகை (2018 ஒக்டோபர் 31)



மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடகப் பிரிவு (2018 ஒக்டோபர 06)

1.4 கைத்தொழில் அபிவிருத்தி சபை சர்வதேச உற்பத்தி கண்காட்சியில் பங்கேற்றல்

அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட சர்வதேச உற்பத்தி கண்காட்சியில் கைத்தொழில் அபிவிருத்தி சபை கலந்துகொண்டது. இதில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்கள் முதன்முறையாக ஸ்மார்ட் எக்ஸ்போ மற்றும் FAIR இந்தியாவுடன் இணைந்து ஏற்பாடு செய்த COMEXPO பெயரின் கீழ் அவர்களின் உற்பத்திகளில் வர்த்தகப் பெயரை காட்சிப்படுத்தினர். மேலும் அவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் D2D நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்து உலகெங்கும் வாழும் ஆயிரக்கணக்கான சேவை பெறுநர்கள் மற்றும் நுகர்வோருக்கு சேவைகளை வழங்குகின்றனர்.

.



மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செய்தி சஞ்சிகை (2018 யூலை- செப்டெம்பர்)

1.5 டிஜிட்டல் வளங்கள் தொடர் தீர்வு

டிஜிட்டல் சப்ளை ச்சேன்ஸ் சொல்யூஷன்ஸ் இல் எஸ் ஜி எஸ் இன் உலகத் தலைவர், உபதலைவரினால் 2018 ஜூன் 28 ஆம் திகதி கட்டுபெத்த கைத்தொழில் அபிவிருத்தி சபையில் டிஜிட்டல் சப்ளை ச்சேன்ஸ் தொடர்பான அறிமுக அமர்வு நடத்தப்பட்டது. ஒரு டிஜிட்டல் வழங்கள் தொடர் தீர்வானது நுகர்வோரின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும், நுகர்வோருடன் வழங்கல் தொடர்களை தொடர்பு படுத்துவதற்கும் தொழில் முயற்சிகளுக்கு உதவுகின்றது. இதன் மூலம் கம்பெனிகளுக்கு அவர்களின் ஒட்டுமொத்த வழங்கல் தொடலில் உள்ள அனைத்து வழங்குனர்கள்,

உள்ளடக்கக் கூறுகள் மற்றும் வசதிகளை கண்டறிவதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் ஆற்றல் கிடைக்கின்றது. டிஜிட்டல்மயப்படுத்துதல் காரணமாக வழங்கல் தொடரானது மூலப்பொருட்கள், துணைப் பொருட்கள் மற்றும் பங்குகள் ஆகியவற்றை வழங்குனர்களிடமிருந்து, அப் பொருட்களையும் முடிவுப்பொருட்களையும் ஏற்றிச் செல்பவர்கள் வரையிலும் அத்துடன் இறுதியில் சேவையினை கோருகின்ற நுகர்வோர் வரையிலுமாக அனைவரும் உள்ளடங்கிய அனைத்து தரப்புகளுக்கும் முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் முழுமையான ஒன்றிணைந்த இடைத்தொடர்பு தொகுதியாக மாற்றமடைகின்றது.



மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செய்தி சஞ்சிகை (2018 ஏப்பிரல் - யூன்)

02. செயலாற்றுகை மீளாய்வு

சபையின் பௌதீக முன்னேற்றம் பற்றிய சுருக்கம்

2018 ஆம் ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்தி சபை இந்நாட்டின் வர்த்தக சமூகத்தினை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு முறைகளில் ஒத்தாசைகளையும் உதவிச் சேவைகளையும் வழங்கியது. மேலும் தொழில்முயற்சி அபிவிருத்திக்காகவும் உள்நாட்டு கைத்தொழில்கள் என்ற வகையில் குறிப்பாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல், ஊக்கப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு வசதிகளை வழங்குதல் தொடர்பான மூலோபாயங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு சபை கடப்பாட்டினை கொண்டுள்ளது. இந்நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டும் வளர்ந்துவரும் கைத்தொழில்கள்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை விரிவாக்குவதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபை மத்திய அரசாங்கத்தின் அமைச்சுடன் (நிரல் அமைச்சு) இணைந்து பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அறிமுகப்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

- **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

கைத்தொழில்களின் ஆக்க விளைவினை மேம்படுத்தும் பொருட்டு கைத்தொழிலாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. அப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில் முயற்சி, முகாமைத்துவம், தொழில்நுட்பம் மற்றும் இயந்திரோபகரணங்களை பராமரித்தல் போன்ற துறைகளில் அவர்கள் கொண்டுள்ள திறன்களை வலுவூட்டுவதற்கு உதவியுள்ளது. 2018 சனவரி முதலாம் தேதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சபை அடைந்துள்ள முன்னேற்றத்தை கருத்தில் கொள்ளும்போது அக்காலத்தில் சபை முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான 300 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளதுடன் இதன் மூலம் 5,518 கை தொழிலாளர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

2.1 அட்டவணை: கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்ட பயற்சி நிகழ்சசித்திட்டங்கள்- 2018

இலக்கம்	விபரம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகள்
(1)	முகாமைத்துவ பயறிசி நிகழ்ச்சித்திட்டங்கள்	180	2,155
(2)	தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்.	120	3,363
மொத்தம்		300	5,518

- **அறிக்கைகளை தயாரித்தல்:**

இந்த காலகட்டத்துக்குள் வங்கிக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏனைய பணிகளுக்கும் தேவையான இயந்திர உபகரணங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை, தொழில்நுட்ப அறிக்கை மற்றும் சாத்தியவள ஆய்வு அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்டன. இதற்கமைவாக இயந்திர உபகரணங்களை மதிப்பீடு செய்தல். கருத்திட்ட சாத்திய வளம் மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகள் ஆகிய வகுதிகளின் கீழ் தயாரிக்கப்பட்ட மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை 502 ஆகும்

2.2 அட்டவணை: அறிக்கைகளை தயாரித்தல் - 2018

இலக்கம்	விபரம்	அறிக்கைகளின் எண்ணிக்கை
(1)	இயந்திரோபகரணங்களின் மதிப்பீட்டு அறிக்கை	89
(2)	கருத்திட்ட சாத்தியவள அறிக்கை	92
(3)	தொழில்நுட்ப அறிக்கை	321
மொத்தம்		502

- **தற்போதுள்ள கைத்தொழில் பேட்டைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்**

(1) கைத்தொழிற்சாலைகளுக்கு **22** காணித் துண்டுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் **16** கைத்தொழிற்சாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் **376** தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன

(2) **29** கைத்தொழில் காணி துண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது


- **சேவைகள்**

கைத்தொழில் அபிவிருத்தி சபை தேசிய கைத்தொழில்களுக்கு அவற்றின் உற்பத்தி தரத்தையும் சந்தைக்கான வாய்ப்புகளையும் மேம்படுத்துவதற்காகவும் உற்பத்தி செயன்முறையினை விருத்தி செய்வதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் தேவையான நவீன தொழில்நுட்பம் மற்றும் உரிய முகாமைத்துவ வழக்கங்கள் தொடர்பான சேவைகளை வழங்கும் விடயத்திலும் வழிகாட்டுதல்களை வழங்கும் விடயத்திலும் ஈடுபட்டுள்ளது. **2018** சனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் **31**ம் திகதி வரையிலான காலகட்டத்தில் சபை அடைந்துள்ள முன்னேற்றத்தை கருத்தில் கொள்ளும்போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் தேவைக்கேற்ப பொறியியல் சேவையினை வழங்குதல். வார்ப்பு வேலை தளத்திற்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குதல், உலோகம் மற்றும் இறப்பர் கைத்தொழிலுக்கு தேவையான சேவைகளை வழங்குதல், இயந்திர உபகரணங்கள்

உற்பத்தி செய்தல், கைத்தொழில் தகவல்களை வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டுள்ளது. இச் சேவையினை பெற்றுக் கொண்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையை **3,317** ஆகும். பொறியியல் சேவை வகுதியின் கீழ் **198** கைத்தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் **65** கைத்தொழிலாளர்களுக்கு வார்ப்பு சேவைகளையும், **252** கைத்தொழிலாளர்களுக்குமின்முலாம் பூசும் சேவைகளையும் வழங்கியுள்ளது. மேலும் சபை **374** கைத்தொழிலாளர்களுக்கு **1,500** மெட்ரிக் தொன் கழிவு உலோகத்தையும், **588** பேருக்கு **28,000** கிலோகிராம் இறப்பர் கலவையையும் வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக சபை மைய நீக்கம் செய்யப்பட்ட **2500** லீற்றர் இறப்பர் பால் மற்றும் **28000** கிலோகிராம் அரைத்த இறப்பர் கலவையும் வழங்கியுள்ளது.

அட்டவணை 2.3: கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய விபரம் - 2018

இலக்கம்	விபரம்	சி.ந.கை எண்ணிக்கை
(1)	பொறியில் சேவை	515
(2)	வார்ப்பு வேலை, உலோக மற்றும் இறப்பர் கைத்தொழல்களுக்கான மூலப்பொருட்களை வழங்குதல்	1,092
(3)	இயந்திரோபகரண உற்பத்தி	09
(4)	கைத்தொழில் தகவல்களை வழங்குதல்	1,701
மொத்தம்		**3,317**



03. தொழிற்பாட்டு மீளாய்வு



3.1 நிர்வாகப் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்து பிரிவுகளினதும் செயலாற்றுகை வினைத்திறன்மிக்க வகையில் பேணிவரப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு சபையின் அனைத்து மனித வளங்களையும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள், பெறுகைகள் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு, போக்குவரத்துப் பணிகளை ஏற்பாடு செய்தல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுச் சபையின் நிர்வாகம் போன்றவை மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும். மேலும் சபையின் பணியாளர்களை வலுவூட்டும் பொருட்டு ஆட்சேர்த்தல் நடைமுறை மற்றும் பதவி உயர்வு நடைமுறை ஆகியவற்றை தயாரித்தல், கிரமமான முறையில் ஆட்சேர்ப்பு செய்தல், பதவி உயர்வு, ஓய்வு பெறுதல் சார்ந்த விடயங்கள், ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல், உள்நாட்டு பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வழங்குதல், நலனோம்புகை மற்றும் ஊழியர் இழப்பீட்டு திட்டங்களை முகாமைத்துவம் செய்தல் போன்றவை இத்துறைக்கு சாட்டப்பட்டுள்ள மேலதிக சில பணிகள் ஆகும். இதற்கமைவாக சிறந்த நிர்வாக பிரிவொன்றை கொண்டிராமல் நிறுவனமொன்று தொழில்வாண்மை ரீதியில் சிறந்த முறையில் இயங்க முடியாது.

அலுவலக நிர்வாகமானது பணியாற்றும் நிலையமொன்றின் உயர்ந்த ஆக்க விளைவு மற்றும் வினைத்திறன் மீது தாக்கம் விளைவிக்கும் ஒரு பிரதான துறையாகும். அது சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையில் இணைப்பை பேணி வருகின்ற இணைப்பு பொறிமுறை யாகவும் தொழிற்படுகின்றது. அது பணியாளர்களை அகத் தூண்டலுக்கு உட்படுத்தி அவர்களுக்கு நிறுவனத்தின் குறிக்கோள்கள் தொடர்பாக புரிதலை ஏற்படுத்துகின்றது. மேலும் நிர்வாக மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவுக்கு சபையின் பணியாளர்களின் ஆற்றலை மேம்படுத்தி தேவையான திறன் விருத்தியினை மேற்கொள்வதற்கான பொறுப்பும் சாட்டப்பட்டுள்ளது. சபையின் ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த அபிவிருத்தியினை முன்னேற்றும் பொருட்டு அவர்களை ஊக்கப்படுத்துல், அதற்கு அவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அவர்களுக்கு அகத்தூண்டலை ஏற்படுத்துதல், முகாமைத்துவ பணியாளர்களின் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துதல், ஏனைய பணியாளர்களின் திறன்களை எதிர்பார்க்கின்ற மட்டத்திற்கு முன்னேற்றுதல், உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதின் பிரதான நோக்கமாகும். மேலும் சபை அதன் ஊழியர்களின் செயலாற்றுகையை மேம்படுத்தும் நோக்கில் ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் ஆற்றல் விருத்தியினை மேற்கொள்வதற்கும் மேலும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளது.

இக்காலக்கட்டத்தில் உள்நாட்டு பயிற்சி வகுதியின் கீழ் நடாத்தப்பட்ட 09 பயிற்சி நிகழ்சசித்திட்டங்களில் 417 பேர் கலந்துகொண்டதுடன் அந்நிகழ்சசித்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட மொத்த பணத்தொகை ரூ. 1,003,700 ஆகும்.

அட்டவணை 3.1.1: ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் – உள்நாட்டுப் பயிற்சி 2018

இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்
(01)	கருத்திட்ட முன்மொழிவுகள் நிகழ்ச்சித் திட்டத்தினை தயாரித்தல்.
(02)	MA வகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
(03)	PL பகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம்.
(04)	புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தொழில் முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கான அறிமுக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
(05)	PL வகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கான கள விஜயங்கள் நிகழ்ச்சித்திட்டம்.
(06)	வினைத்திறன் காண் தடை பரீட்சைகளை நடாத்துதல்.
(07)	தனிநபர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.
(08)	உயர்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.
(09)	போதைவஸ்து பாவனைக்கு பழக்கப் படுவதை தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்.

மேலும் ஊழியர்களின் திறன் மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ரூ. **1,945,000** தொகை செலவிடப்பட்டு ஊழியர்களுக்கு புலமைப் பரிசில்களும் வெளிநாட்டு விஜயங்களும் ஏற்பாடு செய்து தரப்பட்டன.

அட்டவணை 3.1.2: புலைமைப்பரிசில்களும் வெளிநாட்டு பயற்சிகளும் - 2018

இலக்கம்	பயிற்சி பிரிவு
(01)	அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கான வியட்நாம் விஜயம் 30.06.2018 முதல் 08.07.2018 வரை
(02)	2018 - இலங்கையில் கைத்தொழில் பேட்டைகளை நிர்மாணித்தல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு 23.09.2018 முதல் 16.10.2018 வரை - சீனா
(03)	2018 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பாதணி கைத்தொழில் துறையின் உயர்மட்ட அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு 03.10.2018 முதல் 01.11.2018 வரை - சீனா
(04)	2018 – அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான ஆடை தயாரிப்பு பற்றிய பயிற்சிநெறி 12.10.2018 முதல் 10.11.2018 வரை - சீனா
(05)	அபிருத்தி அடைந்துவரும் நாடுகளின் உத்தியோகத்தர்களுக்கான வர்த்தகத்துக்கான உதவி பற்றிய கருத்தரங்கு 16.10.2018 முதல் 29.10.2018 வரை - சீனா
(06)	சார எண்ணெய், நறுமணப் பொருட்கள் உற்பத்தி மற்றும் நறுமருந்துச் சிகிச்சை" தொடர்பிலான பயற்சி

அட்டவணை 3.1.3: ஆட்சேர்த்தல் - 2018

இலக்கம்	பதவி	ஊழியர்களின் எண்ணிக்கை
(01)	பணிப்பாளர் – பொறியியல்	01
(02)	பொறியியளலாளர் (சிவில்/மின்)	02
(03)	தொழில்முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர்	27
(04)	களஞ்சியப் பொறுப்பாளர்	02
(05)	வார்ப்பு வினைஞர்	01
(06)	பற்றுவைப்போர்	02
(07)	இயந்திர கைவினைஞர்	04

3.2 பிராந்திய அபிவிருத்தி பிரிவு

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிராந்திய அபிவிருத்தி பிரிவு, சபையின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பங்களிப்பு வழங்கும் பொருட்டு நான்கு அடிப்படை நடவடிக்கைகளின் கீழ் செயற்படுகின்றது. 25 மாவட்டங்களிலும் உள்ள கைத்தொழில்களின் பொருளாதார நிலையினை இனங்கண்டுகொள்ளுதல், புதிய கைத்தொழில்களை உருவாக்குதல், தற்போதுள்ள கைத்தொழில்களை மேம்படுத்துதல் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், பிராந்திய அபிவிருத்தி பிரிவின் பணியாளர்களினதும் பிராந்திய பணியாட்களினதும் ஆற்றலை விருத்தி செய்தல் மேற்படி நான்கு நடவடிக்கைகள் ஆகும். இதற்கு மேலதிகமாக பிராந்திய கைத்தொழில் பொருளாதார அறிக்கைகளைத் தயாரித்தல், புதிதாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை தாபித்தல், நுண் கைத்தொழில்களை தாபித்தல், தற்போதுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதிக்கு தயார் நிலையில் இருக்கின்ற கம்பெனிகளாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய சில செயற்பாடுகள் ஆகும்.

மீளாய்வாண்டின் விசேட சந்தர்ப்பங்கள்

3.2.1. "தூய்மை உற்பத்தி வழக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகைத்தொழிலாளர்களுக்குISO 14001 சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்" கருத்திட்டம்

தேசிய தூய்மை உற்பத்தி நிலையத்துடன் இணைந்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை யுடன்" தூய்மை உற்பத்தி வழக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கை தொழிலாளர்களுக்குISO 14001 சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்துதல் எனும் கருத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட 14

கைத்தொழில்களின் கைத்தொழில் செயற்பாடுகள் மற்றும் அதற்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற தொழில்நுட்பத்தை மாற்றுவதன் மூலம் கைத்தொழில் களினால் ஏற்படும் பாதக சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல் இக்கருத்து திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. கருத்திட்டத்தின் மதியுரை இந்நிறுவனம் ஆகிய தேசிய தூய்மை உற்பத்தி நிலையமானது தூய்மை உற்பத்தி மதிப்பிடல் மற்றும் வலு கணக்காய்வு ஊடாக வளங்களின் வினைத்திறனை உயர்ந்த மட்டத்துக்குக்கு கொண்டுவருவதற்கு தேவையான தீவுகளை வழங்கியது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான செயல்முறைக்கு நிதிக் கொடுப்பனவொன்றை வழங்குதல் கருத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இதற்கமைவாக ஒவ்வொரு கைத்தொழிலும் ஆகக்கூடியது ரூ. 300,000.00 பணத் தொகை வழங்குவதற்கு விதப்புரை செய்யப்பட்டுள்ளது.

ISO 14001 என்பது உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றளிப்பாக இருப்பதுடன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களை முகாமைத்துவம் செய்யும் அதேவேளை அத்தாக்கத்தினை குறைக்கின்ற கம்பெனிகளுக்கு அச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. சாதகமான சுற்றாடல் தாக்கங்களை கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் அத்துடன் நிறுவனம் சார்ந்த சுற்றாடல் செயலாற்றுகை இடையறாமல் மேம்படுத்துவதற்கும் மேற்படி தெரிவுசெய்யப்பட்ட கம்பெனிகள் ஊக்குவிக்கப் பட்டன,

மின்வலு மற்றும் நீர் பாவனை போலவே பொருட்களின் விரயத்தை குறைத்தல், ரசாயன எண்ணெய் வகைகள் வெளியேறுவதில் ஊடாக ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல், கழிவுநீரை சுத்திகரிக்கும் வழக்கங்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை அகற்றும் உரிய முறைமைகளை நடைமுறைப்படுத்துதல் அக்கைத்தொழில்களினால் பின்பற்றப்படுகின்ற மூலோபாயங்களின் சிலவாகும். ஒழுங்குறுத்தல் மற்றும் சுற்றாடல் தரங்கள் வாயிலாக கைத்தொழில்கள் இசைந்தொழுகுவதற்கான ஒன்றிணைந்த அடிப்படையொன்றை வழங்கி நிலைபேறான தொழில் முயற்சி வழக்கங்களை ஊக்குவிப்பதற்கு இது பங்களிப்பு வழங்குகின்றது.

கருத்திட்டத்தின் வாயிலாக உள்வாங்கப்படும் பிரதான செயற்பாடுகள் :-

- **கைத்தொழில் அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்களுக்கானISO 14001:2015 சுற்றாடல் முகாமைத்துவ முறைமைக்கான மதியுரை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

கைத்தொழில் கணியேISO 14001:2015 சுற்றாடல் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக தொழில் முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் அறிவினை மேம்படுத்தும் பொருட்டு இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் இலங்கை தேசிய தூய்மை உற்பத்தி நிலையத்துடன் இணைந்து 2017 மே 17ஆம் திகதி முதல் பத்தொன்பதாம் திகதி வரை நடத்தப்பட்டது





மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடகப்பிரிவு

- **தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களின் தூய்மை உற்பத்திகளை மதிப்பீடு செய்தல்**
  - தெரிவு செய்யப்பட்ட 15 கைத்தொழில்களில் கழிவு உருவாக்கம் மற்றும் கையாளுதல் தொடர்பான நிலைகளை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு கைத்தொழில் நிலையங்களுக்கு அடிப்படை மதிப்பீடு களை மேற்கொள்வதற்கான விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.
  - மூலப்பொருட்கள் மற்றும் நீர் பாவனை தொடர்பான சம்பந்தப்பட்ட அளவீடுகளை பயன்படுத்தி விரிவான மதிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் களுக்கு வளங்கள் சார்ந்த வினைத்திறன் பற்றிய அளவை குறியீடு செயலாற்றுகை மட்டங்கள் தாபிக்கப்பட்டன. UNIDO மதிப்பீட்டு முறைமையின் கீழ் RECP குறியீடுகள் தயாரிக்கப்பட்டன.
  - ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் கழிவுகளை குறைப்பதற்கான சந்தர்ப்பங்களை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு சிந்தனைக் கிளறல் அமர்வுகள் போன்ற குழு முறைமைகள் வாயிலாக மாற்று மாற்று முறைகள் உருவாக்கப்பட்டன.
  - தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத இடத்துக்கு பொருத்தமான விதப்புரை கள் வழங்கப்பட்டன (சாத்தியவள மதிப்பீடுகள் மற்றும் கிரைய மதிப்பீடுகளுடன்)
  - தொழில் முயற்சிகளுக்கான நடைமுறைப்படுத்தல் திட்டங்கள் தாபிக்கப்பட்டன.

- **ISO 14001: 2015 உள்ளகக் கணக்காய்வு பயிற்சி**

தேசிய தூய்மை உற்பத்தி நிலையத்தினால் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில் முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் 20 பேருக்கும் தெரிவுசெய்யப்பட்ட 14 கைத்தொழில்களை சேர்ந்த மூன்று பிரதிநிதிகளுக்கும் ISO 140001: 2015 உள்ளக கணக்காய்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2018 செப்டம்பர் மாதம் மூன்றாம் திகதி கொழும்பு 01 இல் அமைந்துள்ள மிலோதா நிதியியல் கற்கை நிறுவனத்தில் நடத்தப்பட்டது.





மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடகப்பிரிவு

- **ISO 140001:2015 சான்றிதழ் மற்றும் நிதி கொடைகளை வழங்கும் வைபவம்**

நிதி வழங்கும் வைபவம் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர்,இலங்கை தர நியம நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய தூய்மை உற்பத்தி நிலையத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம், கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய தூய்மை உற்பத்தி நிலையம் மற்றும் இலங்கை தர நியமங்கள்

நிறுவனத்தில் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2018 டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள மிலோதா நிதி கற்கை நிறுவகத்தில் நடத்தப்பட்டது.

அட்டவணை 3.2.1: கருத்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்கள்

இலக்கம்	கைத்தொழிலின் பெயர்	மாவட்டம்
01	எனா இன்டஷ்ரீஸ்	யாழ்ப்பாணம்
02	எனா சீ புட்ஸ் தனியார் கம்பனி	யாழ்ப்பாணம்
03	சாரா இன்டஷ்ரீஸ்	யாழ்ப்பாணம்
04	ஈஸ்ட் லங்கா பொலிசெக்	மட்டக்களப்பு
05	நிவல டீ பெக்டரி	மாத்தறை
06	மொரவக்கோரலே தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கம்	மாத்தறை
07	ப்ரீளேன்	மாத்தறை
08	செய்லியன் எசோசியேட்ஸ் தனியார் கம்பனி	இரத்தினபுரி
09	டல்படிதென்ன டீ பெக்டரி	இரத்தினபுரி
10	மீகோ சிலோன் ஓகனிக் தனியார் கம்பனி	இரத்தினபுரி
11	ரோயல் கெஷு	கம்பஹா
12	கால்டன் ஸ்வீட் ஹவஸ், கட்டான	கம்பஹா
13	பர்ஸ்ட் பர்னிச்சர்	பண்டாரகம
14	மலிந்து டெயரி ப்ரடக்ட்ஸ்	அங்குனுகொலபெலஸ்ஸ





மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடகப் பிரிவு

3.2.2. "திவியட்ட உதானய" நுண் மற்றும் குடிசை கைத்தொழில்கள் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம்

வறுமையை ஒழிப்பதற்கான அரச கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பங்கேற்புடன் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் திவியட்ட உதானய தேசிய நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நுண் மற்றும் சிறிய கைத்தொழில் பிரிவினை கட்டியெழுப்புதல் மற்றும் வலுவூட்டுவதன் முக்கியத்துவம்

அதன்மூலம் வலியுறுத்தப்பட்டது. நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனைத்து தேர்தல் பிரிவுகளுக்கும் ரூபாய் 2.0 மில்லியன் வீதம் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மூலம் ஏற்கனவே உள்ள மற்றும் புதிய கைத்தொழிலார்களுக்கு தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ பயிற்சி வழங்கப்படுகின்றது.

அட்டவணை 3.2.2: தேவையான இயந்திரோபகரணங்களை கொள்வனவு செய்து விநியோகித்தல் தொடர்பான விபரங்கள்

இலக்கம்	விபரம்	பெறுமதி/எண்ணிக்கை
01	கருத்திட்டத்துடன் தொடர்புடைய மாவட்டங்களின் எண்ணிக்கை	15
02	விநியோகிக்கப்பட்ட உபகரணங்களின் பெறுமதி	ரூ.மில். 114.5
03	பயனாளிகளின் எண்ணிக்கை	4,285





மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடகப் பிரிவு

3.2.3 கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம்

"ஆயிரம் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாரம்பரிய மற்றும் பாரம்பரியமல்லாத கைத்தொழில்களை கட்டியெழுப்பும் நோக்கில் 2005 ஆம் ஆண்டில் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய இயந்திரங்களையும் உபகரணங்களையும் உற்பத்தி செயன்முறைகளையும் அறிமுகப்படுத்துதல், தொழில் நுணுக்க முறைகள் சகிதம் பயனாளிகளின் ஆற்றலை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் போன்றவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டு முதல் பிராந்திய அபிவிருத்தி பிரிவினால் கருத்திட்டம் பின்வருமாறு வெவ்வேறாக இரண்டு கருத்திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டன.:

- **கைத்தொழில் உற்பத்தி கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

2018 ஆம் ஆண்டில் உற்பத்திக் கைத்தொழில் கிராமங்கள்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 5.0 மில்லியன் பணத்தொகை ஒதுக்கப்பட்டது பின்வரும் மூன்று கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபாய் 6.4 மில்லியன் செலவிடப்பட்டது.

- மன்னார் மாவட்டத்தின் அரிப்பு
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் களியபுர
- வவுனியா மாவட்டத்தில் கன்னடிய


- **கைத்தொழில் கிராமங்கள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்**

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் வாயிலாக கிராமியமட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கும் அவர்களுக்கு ஒத்தாசை வழங்குவதற்கும் நோக்கம் கொண்டதாக கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பாரிய கவனம் செலுத்தப்பட்டது.

- திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்
- மட்டக்களப்பு மாவட்டத்தில் நாசிவன் தீவு

அட்டவணை 3.2.3: பிராந்திய அபிவிருத்தி பிரிவின் முன்னேற்ற சுறுக்கம்

இலக்கம்	செயற்பாடு	மீள்கொடை /முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள்		பௌதீக முன்னேற்ற(ஒட்டுமொத்தமாக) அடைவு
1	தொழில்நுட்ப அறிவு	தொழில்நுட்பத்தினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	சி.ந.கை / நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	248
2	நிதி உதவி	நிதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	சி.ந.கை / நுண் கைத்தொழில்களின் எண்ணிக்கை	116
3	பொறியில் சார்ந்த உதவி	புதிய தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை	38
4	சந்தைப்படுத்தல் உதவி	சந்தைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை	110
5	விழிப்புணர்வூட்டும் நீகழ்ச்சித்திட்டம்	அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	எதிர்கால தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை	915
6	விளைத்திறனை மேம்படுத்துதல்	விளைத்திறனை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை	35
7	முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்	புதிய முகாமைத்துவ நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்	சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை	51
8	ஏற்றுமதி நடைமுறை பற்றிய அறிவு	அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை முன்னேற்றுதல்	சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை	5
9	உற்பத்தி விளைத்திறனை முன்னேற்றுதல் (தொழில்நுட்பத்தை முன்னேற்றுதல், உட்கட்டமைப்பு வசதிகள், ஆற்றல் விருத்தி, பொதியிடலை முன்னேற்றுதல்)மற்றும் சம்பந்தப்பட்ட சான்றுப்படுத்தல்களைப் GMP, ISO, SLS மற்றும் சம்பந்தப்பட்ட உரிமங்கள்)பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்	உற்பத்தி திறனை உயர்த்துவதற்கான வாய்ப்புகளை முன்னேற்றுதல்	சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை	23



3.3 திட்டமிடல் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் நிறுவனம் சார்ந்த மூலோபாய திட்டத்தை திட்டமிடுதல், உருவாக்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் அத்துடன் பௌதிக மற்றும் நிதி இலக்குகளுக்கு அமைவாக ஒவ்வொரு துறையினதும் மூலோபாய நடைமுறைப்படுத்தல் திட்டங்களின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை இப்பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளில் சிலவாகும். மேலும் நிரல் அமைச்சின் தேவைகளுக்கு அமைவாக செயலாற்றுகை மதிப்பீடுகளுக்கு ஏதுவான தகவல்கள் நடப்பு ரீதியில் வழங்கப்பட்டது

மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தெளிவாகப் புலனாகும் விடயங்கள்

தொழில் முயற்சி கருத்தொன்றை அல்லது மாதிரி அமைப்பொன்றை வெற்றியடையச் செய்ய வேண்டுமாயின் கருத்திட்டங்கள் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கு இசைந்தொழுகுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட முதலீடுகளின் கிரயம் மற்றும் ஊகங்களையும் பரிசீலனை செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் அத்தியாவசியமானதாகும். எதிர்காலத்தில் உருவாகக்கூடிய பிரச்சினை மிக்க துறைகள் தொடர்பாக பணியாற்றும் பொருட்டு கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் எண்ணக்கரு பத்திரங்களை தயாரித்தல் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் திட்டமிடல் பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பணியாகும்..

3.3.1 ஏற்கனவேயுள்ள உற்பத்தி கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கருத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பித்தல் - (*2018* செயல் திட்டத்திலுள்ள நோக்கத்தின் மீது விசேட கவனம்*)*

இலங்கையிலுள்ள ஒட்டு மொத்த கைத்தொழில்களில் *80* வீதமானவை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களாக இருப்பதுடன் இவை இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்பினை வழங்குகின்றது. நாட்டின் பொருளாதாரத்திற்கு அத்தியாவசியமானதாக அமையும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறை நாட்டின் தொழில் நிலையில் *35* வீதமான பங்களிப்பினை வழங்குகின்றது. அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு திட்டமிடப்பட்டுள்ள இந்தக் கருத்திட்டம் *2018*ஆம் ஆண்டு முதல் *2020* ஆம் ஆண்டு ஆரம்பிக்கின்ற இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் தற்போதுள்ள கைத்தொழில்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அக் கைத்தொழில்களை விருத்தி செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும். புள்ளி விவரங்களுக்கு அமைவாக தற்போது இலங்கையில் சுமார்*1,100,000* தொழில் முயற்சிகள் உள்ளன. இந்த தொழில் முயற்சிகளில் *25* வீதமானவை கைத்தொழில்களாக இருப்பதுடன் கருத்திட்டத்தின் மூலம் முதல் ஆண்டில் பெருமதி தொடர் மாதிரியினை பயன்படுத்தி மாவட்ட மட்டத்தில் பகுதிகளாக பிரிந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான *500*கைத்தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

3.3.2 *அபிவிருத்தி கருத்திட்டங்களின்/ நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்* (*மாதாந்த/ காலாண்டு ரீதியில்*)

3.3.3 *நிறுவனம் சார்ந்த பாதீடு மற்றும் ஒட்டுமொத்த செயல் திட்டத்திற்கு அமைவாக மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை தயாரிப்பதற்கு வசதி வழங்குதல்*

3.3.4 *தொழில் முயற்சி/ கைத்தொழில் மதிப்பீடுகளை நடாத்துவதற்கு வசதிகளை வழங்குதல், கைத்தொழில்/ பொருளாதாரம் தொடர்பான புள்ளிவிவரங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கு உதவி வழங்குதல்*

3.3.5 *சபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகை தொடர்பாக அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்*

- ***பௌதிக செயலாற்றுகை :*** *செயற்பாடுகள் மற்றும் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் சகிதம் மீள்கொடை என்றவாறு இரண்டு வகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.*

  செயற்பாடுகள்

  ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக செய்யப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் ஒவ்வொரு துறையும் ஒருங்கிணைந்து செயற்படும் செயற்பாடுகள் இந்த வகுதிக்குள் உள்ளடங்கின்றன.

  பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளைக் கொண்ட மீள்கொடை

  இந்த வகுதியின் கீழ் ஒட்டுமொத்த இலக்குகள் மற்றும் அடைவுகளுக்கு மேலதிகமாக இலக்குகள் மற்றும் அடைவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

- ***நிதிசார் முன்னனேற்றம்:*** மூலதனம் பாதீடு மற்றும் சபைக்கு சொந்தமான நிதியங்களிலிருந்து செலவிடப்பட்ட மாதாந்த செலவுகள் மற்றும் ஒட்டுமொத்த செலவுகள் ஆகியவை உள்ளடங்கலாக நிதிசார் முன்னேற்றம் இதில் உள்ளடங்குகின்றது. மேலும், இதன் மூலம் வருமான வகுதியின் கீழ் இலக்குகள் மற்றும் அடைவுகள், ஒட்டுமொத்த இலக்குகள் மற்றும் அடைவுகள் மற்றும் விசேடமாக முன்னேற்றத்தின் வீதமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.3.6 2018 ஆம் ஆண்டில் செயற்பாடுகளின் மீளாய்வு தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது

மேற்படி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் பாதீடு மற்றும் ஒட்டுமொத்த செயல் திட்டத்திற்கு அமைவாக மூலதன மற்றும் மீண்டெழும் செலவுத் தேவைகளை தயாரிக்கும் பணியில் இணைந்து கொள்வதும் திட்டமிடல் பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பொறுப்பாகும்.

3.4 சந்தைப்படுத்தல் பிரிவு

உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் கைத்தொழில்கள் வணிகரீதியில் சாத்தியமான கைத்தொழில்களாக விரிவு படுத்திக் கொள்வதற்கு வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் உதவிகளை மேம்படுத்தும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சந்தைப்படுத்தல் பிரிவுக்கு சாட்டப்பட்டுள்ள பணியாகும். மேலும் இப்பிரிவு சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை தாபித்துக் கொள்ளும் பொருட்டு கைத்தொழில் அல்லது நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்தல் உதவி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது.

கைத்தொழில் கண்காட்சிகள் மற்றும் வர்த்தக கண்காட்சி களை ஏற்பாடு செய்தல் அவற்றை நடாத்துதல், "லக்கம்" சந்தைப்படுத்தல் நிலையங்களுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் மற்றும் துணை ஒப்பந்தங்களை பரிமாற்றிக் கொள்வதற்கு வசதி அளித்தல் இப்பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள மேலும் சில பணிகளாகும். அமைப்பு என்பது தனது இலாபத்தின் மூலம் வாடிக்கையாளர்களின் திருப்தியினை உச்ச மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான தமது இலக்குகளை அறிந்து கொள்ளும் பொருட்டு பொது நோக்கம் ஒன்றின் ஊடாக செயற்படுகின்ற அங்கத்துவ தொடராக இருப்பதால் சந்தைப்படுத்தல் பிரிவு சபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகைக்கு இசைந்தொழுகும் வகையில் தனது பணிகளை மேற் கொள்கின்றது.

3.4.1 சந்தைப்படுத்தல் உதவி

சந்தைப்படுத்தல் செயற்பாடு என்பது நேரம், பணம் மற்றும் முயற்சி ஆகியவற்றை முதலீடு செய்வதாகும். ஆகவே செயற்பாடுகளினால் எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கும் எந்தவொரு செயற்பாட்டையும் மற்றைய செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அனைத்து செயற்பாடுகளையும் அளவிடுதல் வேண்டும்.

- **லக்கம் விற்பனை நிலையம்:**

இந்நிலையம் பாரம்பரிய இலங்கை உற்பத்திகளின் ஆக்கவிளைவினை மேம்படுத்தும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதுடன் வளர்ந்து வரும் தொழில் முயற்சியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையை அடைந்து கொள்வதற்கான வசதிகளையும் வழங்குகின்றது. பல்வேறு வகுதிகளைச் சேர்ந்த பாரம்பரிய மற்றும் ஏனைய வகையிலான உற்பத்திகளின் பிரதான விற்பனையாளராக லக்கம் விற்பனை நிலையம் கடந்த மூன்று தசாப்தங்களாக தனது சேவைகளை வழங்கியுள்ளது. ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் இந்நிலையம் 31 புதிய கைத்தொழிலாளர்களுக்கு சந்தை வாய்ப்புகளுக்கான வசதிகளை வழங்கியுள்ளதுடன் அது வருடாந்த இலக்குடன் ஒப்பிடும்போது 62% வீதமாகும்.

- **துணை ஒப்பந்த பரிமாற்றங்கள்**

துணை ஒப்பந்த பரிமாற்றங்களில் சந்தைப்படுத்தல் பிரிவு அலுவலக தளபாடங்கள், அலுவலக கதிரைகள் மற்றும் சாய்வு கதிரைகள், தோல் பாதணிகள், செருப்புகள், பைகள், இறப்பர் சார்ந்த உதிரிப் பாகங்கள், டீ சர்ட், எழுது கருவிகள், இயந்திரோபகரணங்கள், இழை (பைபர்) போன்ற தெரிவுசெய்யப்பட்ட வகைகளுக்கு கைத்தொழிலாளர்கள்/ சேவை வழங்குனர்கள் சார்பில் பொருட் கட்டளைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு விலைகளை சமர்ப்பிக்கிறது. 2018 ஆம் ஆண்டில் 9 துணை ஒப்பந்ததாரர்களுக்கு சந்தையை அடைந்து கொள்வதற்கான அவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு துணை ஒப்பந்த வசதிகள் வழங்கப்பட்டதுடன் வீதமாக நோக்குகையில் அது வருடாந்த இலக்கில் 9% ஆகும்.

- **கண்காட்சி**

கைத்தொழில் அபிவிருத்தி சபை நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்குபயன்மிக்க வாடிக்கையாளர்களை அணுகுவதற்கும், அவர்களை ஈர்த்துக் கொள்வதற்கும் அவர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்கின்றது. இப்பிரிவின் முன்னேற்றத்தை கவனித்துக் கொள்ளும்போது 6 கண்காட்சி கூடங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் ஒட்டுமொத்தமாக 1925 கைத்தொழிலாளர்கள் மேற்படி கண்காட்சியில் பங்கேற்றனர்.

3.4.2 கழிவுப்பொருள் கருத்திட்டம்

கைத்தொழில் அபிவிருத்தி சபை அரச நிறுவனங்களில் வெளியேற்றப்படும் இரும்பு கலந்த அல்லது இரும்பு கலவையற்ற உலோக கழிவுப் பொருட்களை சேகரித்து கழிவுப் பொருட்களை அலுமினியம் மற்றும் பியுட்டர் சார்ந்த உற்பத்திகள் செப்பு மற்றும் பித்தளை சார்ந்த உற்பத்திகள் ஈயம் சார்ந்த உற்பத்திகள் இரும்பு சார்ந்த உற்பத்திகள் எளிதான பொறியியல் உற்பத்திகள் போன்ற உற்பத்திகளில் ஈடுபடுகின்ற கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கின்றது. கைத்தொழிலாளர்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் குறிப்பாக பதிவு செய்து கொண்டுள்ளதுடன் கழிவுப்பொருட்கள் சலுகை விலையில் அக்கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தை கவனத்தில் கொள்ளும்போது 374 பேருக்கு இதன் கீழ் நன்மை கிடைத்துள்ளதுடன் வருடாந்த இலக்குடன் ஒப்பிடும்போது அது 94% முன்னேற்றமாகும்.


3.4.3 ஆலோசனைச் சேவை

பொதுவாக மிகவும் கிரயம் சார்ந்த பயனுறுதிமிக்க மூலோபாயங்கள் நீண்ட கால அடிப்படையில் திட்டமிடப்படுகிறது. இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு துறையினதும் மூலோபாய திட்டங்கள் ஒட்டுமொத்த மூலோபாய திட்டத்திற்கும் ஏனைய திணைக்களங்களின் திட்டங்களுக்கும் இசைந்தொழுகுதல் வேண்டும்..

இதற்கமைவாக, சந்தை மற்றும் போட்டி தன்மை தொடர்பாக நிறுவனத்தின் நிலையை அறிந்து கொள்ளுதல் முக்கியமானதாகும். ஆகவே சந்தைப்படுத்தல் பிரிவின் வேண்டுகோளுக்கு அமைவாக சந்தை அறிக்கைகளைத் தயாரித்தல் உற்பத்திகளின் தரம் குறியீடு மற்றும் பொதியிடல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதல் அத்துடன் சந்தை தகவல்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் புதிய சந்தைப் போக்குகள் பற்றி அவ்வப்போது செயலமர்வுகளை நடாத்துதல் கைத்தொழில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் இனங்காணப்பட்ட சாத்தியமான உற்பத்திகள் தொடர்பாக சந்தை சாத்தியவள அறிக்கைகளைத் தயாரித்தல் நடத்தப்பட்டன.

அட்டவணை 3.4.1 : முன்னேற்ற பொழிப்பு அறிக்கை – 2018

இல	செயற்பாடு	வெளியீடு		பௌதீக முன்னேற்றம் (திரண்ட)
				அடைவு
01	துணை ஒப்பந்த வசதகிளை வழங்குதல்	சந்தைக்கான வாய்ப்புகள் அதிகரித்தல்	துணை ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை	9
02	கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை வழங்குதல் (கழிவுகள்)	உற்பத்திகளுக்கான வாய்ப்புகள் அதிகரித்தல்	துணை ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை	374
03	வர்த்தக கண்காட்சிகளை நடாத்துதல்	சந்தைக்கான வாய்ப்புகள் அதிகரித்தல்	பங்கேற்ற கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	1925
04	லக்கம் ஊடாக சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை வழங்குதல்	சந்தைக்கான வாய்ப்புகள் அதிகரித்தல்	புதிய கைத்தொழிலாளர்களின் எண்ணக்கை	31



3.5 கைத்தொழில் பேட்டை பிரிவு

கைத்தொழில் அபிவிருத்தி சபை கைத்தொழில் பேட்டை பிரிவு தாபிக்கப்பட்டதையடுத்து கைத்தொழிலாளர்களின் (அரச/ தனியார் துறை) கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் மறு சீரமைத்து கொள்வதற்கும் பொருத்தமான காணித் துண்டுகளை பரிந்துரைத்து கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை வழங்கி கைத்தொழில்களுக்கான தேவையினை நிறைவேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது..

1967 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை விருத்து செய்யப்பட்டுள்ள மொத்த காணிக விளையாட வேண்டும் என்ன வாடியா பழக்க வேண்டுமா என்னளின் அளவு 296 ஏக்கர்கள் ஆகும். தற்போதுள்ள கைத்தொழில் பேட்டைகளில் உள்ள காணிகளின் அளவு 645 காணித் துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் அவை 317 கைத்தொழிலாளர்களுக்குவினியோகிக்கப் பட்டுள்ளது. விருத்தி செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தக் காணித் துண்டுகளின் எண்ணிக்கையில் மேலும் 233 காணித் துண்டுகளில் ஏற்கனவே கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது டன் அதன்மூலம் உருவாகி இருக்கும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை 7,056 ஆகும். மேலும் 46 காணித் துண்டுகளில் கைத்தொழில்களுக்கு தேவையான கைத்தொழிற்சாலைகளை அமைக்கும் பணி பல்வேறு கட்டங்களில் இடம்பெற்று வருகிறது. சிறு கைத்தொழில் பேட்டைகளில் அப்பா அமைந்துள்ள 76 கைத்தொழில் அலகுகள் தற்போது செயல்படுத்தப்படாமல் இதற்கான காணித் துண்டுகள் குடியிருப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதால் அவற்றின் ஒப்பந்தங்களை முடிவுறுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 60 கைத்தொழிலுக்கு கட்டி முடிக்கப்பட்டுள்ள 80 கட்டிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இக் கைத்தொழில்கள் வாயிலாக 1696 தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பிரதான நகரப் பிரதேசங்களுக்கு வெளியே கைத்தொழில்களை தாபித்தல், சன நெருக்கடி மிகுந்த பிரதேசங்களில் தற்போது செயற்படுகின்ற கைத்தொழில்களை வேறு இடங்களுக்கு மாற்றுதல், சிறுகைத்தொழில் களுக்கு துணை ஒப்பந்த சந்தர்ப்பங்களை வழங்குதல், பொது வசதிகளை வழங்குவதன் வாயிலாக சிறுகைத்தொழில் அலகுகளின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு ஆற்றலை கண்டறியும் பொருட்டு ஆய்வுகளை மேற்கொள்ளுதல், ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை அறிக்கையிடுதல் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது.

30 ஆண்டு காலமாக இந் நாட்டில் நிலவிய சிவில் யுத்தம் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ளஅச்சுவேலி கைத்தொழில் பேட்டை முழுமையாக அழிவடைந்த காரணத்தினால் கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மீண்டும் மறு சீரமைக்கப்படுவதற்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு முறையே இலங்கை ரூபாய்களில் 220 மில்லியன் மற்றும் 50 மில்லியன் நிதி பங்களிப்பு வழங்கப்பட்டது. இதற்கமைவாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மறுசீரமைக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் சில கைத்தொழில்களை ஆரம்பித்து மீண்டும் ஒரு முறை கைத்தொழில் பேட்டையாக செயற்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டது.

உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை அல்லது போதிய அளவு இல்லாமை சிறு அளவிலான கைத்தொழில்கள் முகம் கொடுக்கின்ற பிரதான சவாலாக இருப்பதனால் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் 2018/ 2019 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் கைத் தொழிலாளர்களுக்கு நலன் கிட்டும் வகையிலும் 2018/ 2019 ஆண்டுகளில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணமாக அவர்களின் மொத்த மாதாந்த மின்சார கட்டண பட்டியலில் 50 வீதத்தை மீளளிப்பு செய்வதற்கும் ரூ. 100 மில்லியன் வழங்கப்பட்டதுடன் அதற்கு முறையே ரூ. மி.4.5 மற்றும் ரூ.மி 8.7 வழங்கப்பட்டது.

மேலும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபாய் 100 மில்லியன் முதலீடு தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இது வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அமைந்துள்ள இரண்டாவது கைத்தொழில் வலயமாகும். மேலும் இந்த அபிவிருத்தி கருத் திட்டத்தின் வாயிலாக வடமாகாணத்திலுள்ள கைத்தொழிலாளர்களுக்குபுதிதாக தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு புதிய உந்து சக்தி கிடைக்கும்.





மூலம்: கைத்தொழில் அபிவிருததி சபையின் செய்திச் சஞ்சிகை (யூலை-செப்டெம்பர் 2018)

2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரதான செயற்பாடுகள்

கைத்தொழில் பேட்டை பிரிவினால் ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிரல் அமைச்சின் ஊடாக பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் ரூ.**78.1** மில்லியன் பணத்தொகை மேற்படி செயற்பாடுகளுக்கு செலவிடப் பட்டது. இந்நாட்டிலுள்ள சிறிய அளவிலான கைத்தொழில்களை விருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களில் உள்ளடக்குகின்றது. பிரதானமாக இதற்கு அரசுக்கு உரித்துடைய கட்டுமான பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அக் கருத்திட்டங்களில் பெரும்பாலானவை **2015**ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

அட்டவணை 3.5.1 : கருத்திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான செலவு மதிப்பீடு

தொ. இல.	கைத்தொழிற் பேட்டையின் பெயர்	செயற்பாடு	மதிப்பீடு(ரூ)	2017 இல் கிடைத்த நிதி (ரூ)	2018 இல் கிடைத்த நிதி (ரூ)	மீதி (ரூ)	முன் னேற்ற ம் (%)
01	பல்லேகல	வடிகான்கள் மற்றும் நடைபாதைகளை அமைத்தல், அத்துடன் ஏற்கனவே உள்ள மதில்களைப் புதுப்பித்தல்.	16,397,744.20	9,698,353.02	896,190.02		100%
02	பானலுவ	வடிகான்கள். வேலி மற்றும் பம்பி நிலையம் மற்றும் தறபோதுள்ள வீதிகள பழுதுபார்த்தல்	15,517,037.00	6,977,537.50	2,614,059.85		100%
03	புஸ்ஸல்ல	வேலியனஒரு பகுதியை அமைத்தல்	4,711,000.00		2,057,207.82		100%
04	பானலுவ	எல்லைச் சுவரை அமைத்தல்	20,763,250.00	3,140,000.00	3,668,669.46	13,290,762.39	35%
05	அச்சுவேலி	மின்மாற்றியை நிறுவுறுதல்	2,980,000.00	2,980,000.00			100%
		மின்மாற்றிக்கூடத்தை அமைத்தல்	88,000.00		88,000.00		100%
		பாரியதொரு கிணற்றினை அமைத்தல் மற்றும் அஞ்சல் அலுவலகக் கட்டிடம் அத்துடன் அலுவலகக் கட்டிடம் ஆகியவற்றைப் புதுப்பித்தல்	3,835,250.00	767,050.00	1,430,898.76	1,637,701.24	55%
06	நாகம்பக	குழாய் கிணறு ஒன்றை நிருமாணித்தல்	928,705.50		928,705.50		
மொத்தம்				23,562,940.52	11,683,731.41	14,928,463.63	

அட்டவணை 3.5.2 : கருத்திட்டத்தின் முன்னேற்றம்

தொ.இல.	கைத்தொழிற் பேட்டையின் பெயர்	செயற்பாடு	மதிப்பீடு(ரூ)	நிதி முன்னேற்றம்			முன்னேற்றம் (%)
				2016 மற்றும் 2017 இல் கிடைத்த நிதி (ரூ	2018 இல் கிடைத்த நிதி (ரூ	மீதி (ரூ)	
01	களுதாவல	உள்வாரியான வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல்	39,599,966.71	17,216,985.53	17,509,229.94	3,355,189.90	100%
02	பன்னல	மின்மாற்றியொன்றைப் பொருத்துதல்	2,749,846.94	2,749,846.94			100%
		2ஆம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்	76,672,395.09	15,334,478.50	13,919,597.63	45,418,315.96	90%
03	ஹொரண	உள்வாரியான வீதிகளுக்குக் காப்பற் இடுதல் மற்றும் வீதிகளை அமைத்தல்	12,000,000.00	5,500,000.00	5,055,097.39	555,531.44	100%
04	பல்லேகல	உள்வாரியான வீதிகளுக்குக் காப்பற் இடுதல் மற்றும் எல்லை வேலிகளை அமைத்தல்	35,707,877.16	16,084,629.35	11,413,836.50	4,005,136.95	90%

தொ.இல.	கைத்தொழிற் பேட்டையின் பெயர்	செயற்பாடு	மதிப்பீடு(ரூ)	நிதி முன்னேற்றம்			முன்னேற்றம் (%)
				2016 மற்றும் 2017 இல் கிடைத்த நிதி (ரூ	2018 இல் கிடைத்த நிதி (ரூ	மீதி (ரூ)	
05	கொட்டகல	உள்வாரியான வீதிகள் மற்றும் மலசல கூடங்களை அமைத்தல் மற்றும் பிரதான வாயிலைப் பழுதுபார்த்தல்	4,518,869.50	1,964,725.88		2,554,143.62	90%
06	புஸ்ஸல்ல	உள்வாரியான வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல்.	7,910,738.49	1,149,430.03	6,718,816.63		100%
07	வவுனியா	உள்வாரியான வீதிகளை அமைத்தல்	10,000,000.00	5,000,000.00	5,186,113.39		100%
08	ஏகல	உள்வாரியான வீதிகளுக்குக் காப்பற் இடுதல்	31,000,000.00	15,500,000.00	6,615,201.19	1,193,355.78	100%
		மலக்கழிவகற்றும் தொகுதியின் எஞ்சிய பகுதியினை அமைத்தல்	5,525,432.26	5,526,432.26			100%
09	நாகம்பக	மின்மாற்றியொன்றைப் பொருத்துதல்	2,756,161.62	2,756,161.62			80%
		காணிகளைத் துப்பரவு செய்து எல்லை வேலிகளை அமைத்தல்.	5,128,826.25	3,826,821.43		1,488,497.76	98%
10	புத்தல	உள்வாரியான வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல் அத்துடன் எல்லை வேலியினை அமைத்தல்	22,122,500.00	16,591,875.00		1,793,228.65	98%
மொத்தம்				109,201,386.54	66,417,892.67	60,363,400.06	

- **கைத்தொழில் அலகுகளுக்கு கைத்தொழிலாளர்களை தெரிவுசெய்தல்**

புதிய காணித்துண்டுகள்/ கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்துள்ள சாத்தியவளமுடைய கைத்தொழிலாளர்கள் 30 பேர் நேர்முகப்பரீட்சை அமர்வுகள் வாயிலாகத் தெரிவு செய்யப்பட்டன.

அட்டவணை 3.5.3 : 2018 இல் ஒதுக்கீடுசெய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள்

இலக்கம்	கைத்தொழில் பேட்டை	காணித் துண்டுகள்/கட்டிடங்கள் ஒதுக்கீடு	உருவாக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள்	
			கைத்தொழில்கள்	தொழில்வாய்ப்புகள்
01	பல்லேகல	7	4	169
02	ஹொரன	1		
03	புத்தள	1		
04	புஸ்ஸெல்ல	3	1	8
05	பன்னல	2	1	15
06	பானலுவ	2	3	45
07	வவுலாகல	2	2	26
08	கொட்டகலை	1		
09	கலிகமுவ	1		
10	அச்சுவேலி	2		
11	ஏக்கல	-	4	103
12	களுதாவல	-	1	20
	மொத்தம்	**22**	**16**	**386**


- **குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல்**

காணிகள்/ கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங்கள் போன்றவற்றுக்கு ஏதுவாகக் கைத்தொழிலாளர்களுடன் 20 – 30 வருட காலத்திற்குக் குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இதற்கமைவாக 2018ஆம் ஆண்டில் 29 குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதுடன் அதன்மூலம் ரூபாய் ரூ.409,030.74 வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டது.

அட்டவணை 3.5.4 : வருமான சேகரிப்பு

இல.	விபரம்	தொகை
01	வாடகை – கைத்தொழில் பேட்டைக் கட்டிடங்கள்	21,095,614.75
02	மேலதிக கட்டிட மதிப்பீட்டு கட்டணங்கள்	204,156.00
03	வாடகை – விருத்தியாக்கப்பட்ட கைத்தொழில் பேட்டைக் காணிகள்	38,535,269.91
04	வாடகை – மேலதிக காணி	1,844,376.66
05	நீர்க்கட்டணம்	6,563,329.42
06	மிகை விதிப்பு	1,639,626.31
07	காப்புறுதிக் கட்டணம்	46,587.24
	மொத்தம்	**69,928,960.29**

நாட்டினுள் கைத்தொழிற் பேட்டைகள் தாபிக்கப்பட்டுள்ள இடங்கள்



3.6) பொறியியல் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொறியியல் பிரிவு இந்நாட்டில் நிலைபேறான கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு சபையின் தொலைநோக்கினை நடைமுறைப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குகின்ற பிரதான பிரிவாக செயற்படுகின்றது. மேலும் இப்பிரிவு கைத்தொழிலாளர்களின் வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்தி தமது நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாட்டு ஆற்றல்களை முன்னேற்றிக் கொள்வதற்கு தேவையான உதவியினை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக இப்பிரிவு உலோக மற்றும் உலோக அல்லாத உற்பத்திகள்/ கைத்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்களை உற்பத்தி செய்தல் தொடர்பான அடிப்படை உற்பத்திக் காரணிகள் (நிலம், தொழில்நுட்பம். மூலப்பொருட்கள்) தொடர்பாக ஆய்வுகளை மேற் கொள்கின்றது. மேலும் உபகரணங்கள், இயந்திரங்கள், பொறிகள், உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தல், கைத்தொழில் களுக்கான தர அறிக்கைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் உலோக கழிவுப்பொருட்களை சுழற்சிக் உட்படுத்தும் பொருட்டு உள்நாட்டு உலோக கைத்தொழில்களுக்கு வார்ப்பு வேலைத்தள வசதிகளை மேம்படுத்துதல் போன்றவை இப்பிரிவினால் வழங்கப்படுகின்ற மேலும் சில சேவைகளாகும்..

சம்பந்தப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு பொறியியல் பிரிவின் கீழ் பின்வரும் அலகுகள் தொழிற்படுகின்றன.

(அ) கட்டுபத்த தலைமை அலுவலகம் – பொறியியல் வேலைத்தளம், பொறியியல் வார்ப்பு வேலைத்தளம், பணிப்பாளர் (பொறியியல்) அலுவலகம், (தொழில்நுட்பத் தகவல்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள், மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றவை) சிவில் பொறியியல் மற்றும் மின் பொறியியல் சேவைகள் எனும் பிரிவுகள் இதில் உள்ளடங்குகின்றன.

(ஆ) மின் முலாம் பூசும் நிலையம் – பேலியகொடை

(இ) பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் – பன்னல

(ஈ) பொது சேவைகள் நிலையம் – மாத்தறை

(உ) பித்தளைப் பொருட்கள் சேவை நிலையம் – பமுணுவ

மேற்படி சேவைப் பிரிவுக்கு மேலதிகமாக நிலைபேறான அபிவிருத்திக்காக உள்ளூர் கைத்தொழில் களுக்கு எதிர்ப்பார்க்கப்படும் பெறுமதி சேர்க்கும் சேவைகளை வழங்கும் பொருட்டு பின்வரும் பிரிவுகள் மிகவும் முக்கியமானவை களாக அமைகின்றன.

- **வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி பிரிவு:**


கைத்தொழில் தேவைகளை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் கைத்தொழில்களின் நிலைபேறான அபிவிருத்தி க்கு தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உற்பத்தி வசதிகளை உருவாக்குதல் அத்துடன் நிலைபேறான முறையில் அவற்றை நடைமுறைப் படுத்துதல் இப்பிரிவு க்கு சாட்டப்பட்டுள்ள பணிகளாகும்

- **மதிப்பீடு மற்றும் உலோகம் சார்ந்த கைத்தொழில் தரவுகளை பகுப்பாய்வு செய்யும் பிரிவு:**

இலங்கைக்குள் இயந்திர உபகரணங்கள் பொறி த்தொகுதிகள் மற்றும் உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தல் அத்துடன் தர அறிக்கைகளைத் தயாரித்தல்.

அட்டவணை 3.6.1 : பிரிவின் முன்னேற்றம்- 2018

தொ/இல	பிரிவு / அலகு	வருமானம்/ (ரூ.)
2018 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட சேவைகளுக்கான வெளிவாரியான வருமானம்		
01	பொறியியல் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பிரிவு	3,479,699.49
02.	இயந்திர நுட்பம் சார்ந்த வேலைத்தளம்	3,601,334.09
03.	வார்ப்பு பிரிவு	4,040,307.70
04.	A.T.R.D.C, பன்னல	4,700,691.95
05.	E.P.C. பேலியாகொட	2,164,667.36
06.	C.S.C.மாத்தறை	1,655,981.62
07.	வார்ப்பு சேவைகள் நிலையம் - பிலிமத்தலாவ	442,921.09
மொத்தம்		**20,085,603.30**
உள்வாரியான சேவைகள்		
01.	இயந்திர நுட்பம்சார்ந்த வேலைத்தளம்	1,308,752.02
02.	வார்ப்பு பிரிவு	758,886.09
03.	சிவில் பராமரிப்பு பிரிவு	2,763,676.94
04.	மின் பராமரிப்பு பிரிவு	1,098,802.80
மொத்தம்		**5,930,117.85**



<u>தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் விருத்தி</u>

(i) உலோகவியல் ஆய்வுக்கூடம்

இலங்கையிலுள்ள கைத்தொழில்களுக்கான வார்ப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் இப்பிரிவு புதிய உலோகவியல் ஆய்வுக்கூட உபகரணங்களை கொள்வனவு செய்து அறிமுகப்படுத்தியது.

ஒளியியல் வெளியீட்டு நிறமாலைக் கருவி
(Optical Emission Spectrometer)



மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடகப் பிரிவு

- **உலோகப் பகுப்பாய்வு**

மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வு செயலாற்றுகை, பெருமளவு புலனாய்வு நெகிச்சி மற்றும் இலகுவான முறையில் இயக்குதல் போன்றவற்றின் மூலம் மேன்மைவாய்ந்ததாக அமையும் ஒளயியல் வெளியீட்டு நிறமாலைக் கருவி புதியதொரு உலோக பகுப்பாய்வு கருவி வகுப்பினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பகுப்பாய்வு கிளர்ச்சி மூலங்கள் மற்றும் ஒளியியல் முறைமை ஆகியவற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் அனுகூலமான முறையில் ஒன்றோடொன்று பொருத்தப்பட்டுள்ளது.
மெல்லிய தகடுகளையும் சிறிய கோல்களையும் பரிசோதிப்பதற்காக விசேட பொருத்தல்களை இக்கருவி கொண்டுள்ளது. இந்த புதிய பகுப்பாய்வுக் கருவி உருக்கு, இரும்பு, அலுமினியம், செப்பு மற்றும் துத்தநாகம் அடிப்படையிலான உலோகங்கள் போன்றவற்றின் மூலகங்களை கண்டுபிடிப்பதற்கும் அனைத்து பிரதான ஆக்கக்கூறுகளையும் துல்லியமாக பகுப்பாய்வு செய்வதற்கும் இக்கருவி இடமளிக்கின்றது.

- **உலோகவியல் ஆய்வுகூடத்திலுள்ள பிற உலோகவியல் வசதிகள்**

உலோகவியல் பரிசோதனை - உலோகங்களுக்கான காபன் பகுப்பாய்வு பரிசோதனை
வன்மை பரிசோதனை
நீட்சி பரிசோதனை
வளைதல் பரிசோதனை

உலோக உள்ளமைப்பியல் பரிசோதனை – உலோகங்களுக்கான நுண் கட்டமைப்பு பரிசோதனை
விறைப்பு பரிசோதனை


மோல்டிங் மணல் பரிசோதனை - ஈரலிப்பு பரிசோதனை
ஊடுருவுத்திறன் பரிசோதனை
அமுக்க பரிசோதனை
மணியளவு விநியோக பரிசோதனை
மொத்த களிமண் உள்ளடக்க பரிசோதனை
தொழிற்படு கணிமன் உள்ளடக்க பரிசோதனை

3.7) தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம் (CEDACS)

தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம் என்பது தற்போதுள்ள கைத்தொழில்களை உருவாக்குவதற்கு புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்துவதில் ஊடாக புதிய தொழில் முயற்சி கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள விசேட பயிற்சி பிரிவாகும். தொழில் முயற்சியானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ ஆலோசனை நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களில் காணப்படும் சிறந்த சேவை வழக்கங்கள் தழுவிக் கொள்ளப்படுவதை ஊக்குவிக்கின்ற ஆற்றல் விருத்தி மற்றும் பயிற்றப்பட்ட வளங்கள் வாயிலாக தொழில் முயற்சி முகாமைத்துவத் திறன்களை வலுவூட்டுவதற்கு காரணமாக அமைகின்றது. உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில் முயற்சி அனுபவங்களை வழங்குதல், மதியுரை சேவைகளை வழங்குதல், உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு கைத்தொழில் தகவல்கள் மற்றும் தொழில் முயற்சி அனுபவங்களை வழங்குதல் இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சில சேவைகள் ஆகும்.

அட்டவணை 3.7.1 :முன்னேற்ற சுருக்கம் - 2018

இலக்கம்	செயற்பாடு	செயலாற்றுகை குறிகாட்டி	பௌதிக முன்னேற்றம்
01	ஆக்கவிளைவினை நடைமுறைப்படுத்துதல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்	4
		கைத்தொழில்களின்/ நிறுவனங்களின் எண்ணிக்கை	4
02	பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (தொழில்முயற்சி அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் போன்ற)	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	7
		பயனடைந்த கை தொழிலாளர்களின் எண்ணிக்கை	161
03	தொழில் முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள்/ அரசு மற்றும் வெளிவாரி நிறுவனங்களுக்கு தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	கை தொழிலாளர்களின் தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	12
		பயனடைந்த கை தொழிலாளர்களின் எண்ணிக்கை	298



தொழில் முயற்சி மற்றும் சுயதொழில் வாய்ப்புகளுக்கு காணப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் தொடர்பாக இளைஞர் சமுதாயத்திற்குள் விழிப்புணர்வினை மேம்படுத்துவதன் மூலம் நாட்டில்/ சமூகத்தில் தொழில்முயற்சி கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பிரிவினால் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. கைத்தொழில்களில் உயர்ந்த ஆக்க விளைவையும் நிலைபேறான அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் பொருட்டு நிறுவனங்களில் தொழில் முயற்சி கலாசாரம் ஒன்றை உருவாக்கும் பொருட்டு இப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஏனைய சில நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு:

- **கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட அலுவலகங்களுக்கான உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

இவ்வருடம் ஜூலை மாதத்திற்குள் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவை நிலையத்தினால் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்ட அலுவலகங்களில் உற்பத்தி திறன் மேம்படுத்துதல் மற்றும் சேவைகள் துறை வகுதியின் கீழ் தேசிய உற்பத்தித் திறன் போட்டிக்காக விண்ணப்பிப்பதற்கு மாவட்ட அலுவலகங்களை ஊக்குவித்தல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

- **மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

தம்புத்தேகம மகாவலி பிரதேசத்தின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கை தொழிலாளர்களுக்கான தொழில் முயற்சி பணிகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் இப்பிரிவினர் 2018 மார்ச் மாதம் 11ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சித் திட்டத்தின் போது நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் குறிப்பாக சந்தைப்படுத்தல், விலையிடல் அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் தொழில்முயற்சி திட்டமிடல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

3.8) தொழில்நுட்ப சேவைகள் பிரிவு

தொழில்நுட்ப சேவை பிரிவு வளர்ந்துவரும் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சிகளை விரிவாக்குதல் நவீனமயப்படுத்ததுதல், பன்முகப்படுத்தல், உற்பத்தி திறனை உயர்த்துதல் ஆகியவை தொடர்பாக தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக இப்பிரிவு தொழில் முயற்சியாளர்களின் தேவைகளுக்கு அமைவாக உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய், நார்சார்ந்த கைத்தொழில்கள் கட்டிடப் பொருட்கள், கணினி தொழில்நுட்பம், ஆகிய துறைகளை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்,ஆலோசனை சேவைகளை வழங்குதல், வழிகாட்டுதல் ஆகியவற்றை வழங்குகின்றது. தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் போது உச்ச மட்ட வினைத்திறன் உற்பத்தித் திறன் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் ஊடாக பௌதீக மற்றும் உண்மையான தகவல்களை பெற்றுக் கொள்ளுதல், ஒழுங்குபடுத்துதல், பேணுதல், பாதுகாத்தல் மற்றும் தகவல் மூலங்களை அணுகுவதற்கு வாய்ப்பளிப்பதன் ஊடாக வளர்ந்துவரும் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் தொழில் முயற்சியாளர்களின் விசேட தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தொழில்நுட்ப சேவைகள் பிரிவு 2018 ஆம் ஆண்டு செயல் திட்டத்தை தயாரிக்கும்போது தேவைகளுக்கு ஏற்றவாறு பிரதான செயற்பாடுகள் திட்டமிட்டது.

2018 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

3.8.1 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பங்களை பெற்றுக்கொள்ளுதல்

- **சார எண்ணெய், நறுமணப் பொருட்கள் உற்பத்தி மற்றும் நறுமருந்துச் சிகிச்சை" தொடர்பிலான பயற்சி நிகழ்ச்சித்திட்டம் FFDC கன்னாவுஜ், இந்தியா**

இந்தியாவில் உள்ள பிரேக்ரன்ஸ் அண்ட் ப்ளேவர்தேவலப்மன்ட் சென்டர் (FFDC) நிறுவனத்துடன் இணைந்து கைத்தொழில் அபிவிருத்தி சபை இந்தியாவில் சார எண்ணெய், நறுமணப் பொருட்கள், நறு மருந்து சிகிச்சை சார்ந்த உற்பத்திகள்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடத்தியது. ஓளடத மற்றும் நறுமண தாவரங்கள் சார்ந்த உற்பத்திகளின் பெறுமதி சேர்த்தல் உள்ளிட்ட சார எண்ணெய் அடிப்படையிலான உயர்ந்த பொதியிடல் தொடர்பான முழுமையான விழிப்புணர்வு வழங்கப்படுதல் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

மேலும் இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக மேலதிக அறிவினைப் பெற்றுக் கொள்வது மாத்திரமல்லாமல் தொழில் முயற்சி தொடர்புகளை கட்டியெழுப்புதல் மற்றும் வலைப்பின்னலை கட்டியெழுப்பதல் ஆகியவற்றுக்கு உதவியாக அமைந்த மிகவும் பெறுமதியானதொரு வாய்ப்பு வழங்கப்பட்டது. இப்பயிற்சி அமர்வின்போது காய்ச்சி வடித்தல் தொழில் நுணுக்கங்கள், நறுமணப் பொருட்களின் தரத்தை மதிப்பிடுதல், நறுமணம் மற்றும் நறுமணச் சுவையூட்டுதல் , பல்வேறு உற்பத்திகளின் நறுமணச் சுவையை பயன்படுத்திக் கொள்ளுதல், நறு மருந்து சிகிச்சையின்போது சார எண்ணெய் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்ற துறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. மேற்படி நிறுவனத்தின் முன்னோடி இயந்திர சாலைக்குள் ஒலியோரெசின் உற்பத்தி, பூக்களிலிருந்து என்னை வடிகட்டுதல், (பூக்களிலிருந்து நறுமண எண்ணெய்களை உற்பத்திசெய்யும் செய்முறை) அத்துடன் நீர் மற்றும் நீராவி வடித்தெடுத்த தொழில்நுட்ப முறைகள் தொடர்பாக நடைமுறை சார்ந்த செய்முறை விளக்கமும் வழங்கப்பட்டதுடன் பங்கேற்றவர்களுக்கு மேற்படி உற்பத்தி செயல்முறை தொடர்பாக

நேரடியாக நடைமுறை சார் அறிவு வழங்கப்பட்டது. அதுமாத்திரமன்றி மீட் பண்ணி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றவர்கள் பரஸ்பர நன்மைகளை அடைந்து கொள்ளும் பொருட்டு இந்தியாவில் லக்னோவில் இருக்கும் தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிரேகிரன்ஸ் பள்வர் அசோசியேசன் ஒப் இண்டியா போன்ற அத்துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்பி கொள்வதற்கு ஆற்றல் கிட்டியது.

3.8.2 உற்பத்தி/ செயன்முறை அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு

- **மேற்கு மாகாணத்தில் சிறு அளவிலான இரசாயனப் பொருட்கள் உற்பத்திக்கான முன்னோடித் திட்டம் - 2018**

மேற்கு மாகாணத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட சிறு அளவிலான **12** இரசாயன பொருட்கள் உற்பத்தி கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு கைத்தொழில்களின் தரம் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும் பொருட்டு தேவையான நிதித் தேவைகளின் ஒரு பகுதியை வழங்கி கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு இரசாயன பொருட்கள் கைத்தொழிலின் ஒட்டுமொத்த செயலாற்றுகை மேம்படுத்துவதற்காக முன்னோடித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களினால் அவற்றின் உற்பத்தி மற்றும் செயல்முறையை மேம்படுத்துவதற்காக ரூ. **600,00/-** முதலீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் கருத்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகக்கூடியது ரூ. **300,000/-** எனும் அடிப்படையில் மொத்த கருத்திட்ட செலவில் (ஆலோசனை சேவை கட்டணங்கள் மற்றும் தொழிற்சாலை நவீன மயப்படுத்தல் செலவுகள் தவிர்ந்த) **50** வீதத்தை நீரடித்து செய்தது. இக்கருத்து திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட **11** கைத்தொழில்களில் பின்வரும் **8** கைத்தொழில்கள் **2018** டிசம்பர் மாதம் ஆகும்போது தனது கருத்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தன. லேடெக்ஸ் லங்கா தனியார் கம்பெனி, கிரேஸ்டோன் கெமிகல்ஸ் தனியார் கம்பனி, ஆர்.வை.சீ.சீ கலர் தனியார் கம்பனி, பயோ நியுட்ரி இன்டர்நெஷனல் தனியார் கம்பனி, தனுஷ்க பேன்ட்ஸ் என்ட் கெமிகல்ஸ் தனியார் கம்பனி, நெஸ்டிகெம் லங்கா தனியார் கம்பனி, சில்வர் ஸ்டார் இன்டஸ்ரிஸ் மற்றும் யுனிக் மல்டி ஆர்டிஸ்ட் ஆகியவை தங்களது கருத்திட்டங்களை **2018** டிசெம்பர் மாதம் பூர்த்திசெய்தன.

- **இலங்கையில் வலுவூட்டப்பட்ட இழைக்கண்ணாடி உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான ஆற்றலை மேம்படுத்துதல்**

இலங்கையின் இழைக்கண்ணாடி கைத்தொழில் துறைக்கு புதிதாக நுழையும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் தற்போதுள்ள கைத்தொழில்களின் ஏற்றுமதி ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டும் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு பாணந்துறையில் அமைந்துள்ள பொடிபில்டிங் டெக்னாலஜி இன்ஸ்ட்டியுட் லங்கா (தனியார்) கம்பெனியுடன் கலந்துரையாடி மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக நடாத்தியது

- **உற்பத்தி அபிவிருத்தி பணிகள்**

இலங்கையின் தென் கடற்பரப்பில் அதிகமாக காணப்படுகின்றன அல்வா லெக்ட்டியுக்கா கடல் தாவரத்தை பேக்கரி உற்பத்திகளுக்கு பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலை ஆராய்ந்து பார்ப்பதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்துடன் இணைந்து பட்டப் படிப்பினை மேற்கொள்கின்ற மாணவர்களினால் ஆராய்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. மேலும் தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் வாயிலாக அரிசி மற்றும் பலா விதையைக் கொண்டு தயாரிக்கப்படும் ரொட்டி, கிரீன் டீ சார்ந்த பிஸ்கட்டுகள் போத்தலில் அடைக்கப்பட்ட வெண்டிக்காய் உற்பத்தி செய்யப்பட்டது.

3.8.3 கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்துக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

2018 பெப்ரவரி *21*ஆம் திகதி கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் பிளாஸ்டிக் என்ட் ரபர் இன்ஸ்ட்டியுசன் ஒப் ஸ்ரீ லங்கா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்குஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு பாதிக்கப்பட்டுள்ள தேசிய தொழில்வாண்மை நிறுவனமாக இது விளங்குகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முழுமையான தொழில்நுட்ப தேவைகளின் மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கும் தேவையான வளர்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நோக்கம் கொள்ளப்பட்டுள்ளது.



ஆதாரம்: கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சஞ்சிகை (2018 சனவரி - மார்ச்சு)

3.8.4 கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை கைப்பணி சபை ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (லக்சல)

2018 மார்ச் மாதம் 23 ஆம் திகதி கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை கைப்பணிகள் சபை ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இதன் கீழ் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கை தொழிலாளர்களைப் போலவே இளைஞர் சமுதாயத்தினதும் பயிற்சி தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் வெட்டுமரம் சார்ந்த தொழில்நுட்பம் பற்றிய பாட்டில் அபிவிருத்தி பயிற்சியினை வழங்குதல் நோக்காகக் கொள்ளப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் நெஸ்லே நிறுவனம் இவ்வாறு ஒன்றாக இணைவதன் மூலம் மரத்திலான கைத்தொழில் அபிவிருத்திக்கு பெருமளவு சேவை வழங்க முடியும் என இனங்காணப்பட்டது.



ஆதாரம் : கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செய்திமடல் (சனவரி - மார்ச்சு *2018)*

மரத்திலான கைத்தொழில் துறையில் காணப்படுகின்ற பிரதான பிரச்சனை பயிற்றப்பட்ட ஊழியம் இல்லாமை என கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் லக்சல ஆகிய இருதரப்பும் இளம் கண்டுகொண்டுள்ளதுடன் இதன் காரணமாக லக்சல நிறுவனத்துக்குச் சொந்தமான ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பயன்படுத்தி கட்டுபெத்த பிரதேசத்தில் வெட்டுமரம் சார்ந்த பயிற்சி நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்நாட்டின் இளைஞர் சமுதாயத்தை வெட்டுமரம் சார்ந்த கைத்தொழில் துறைக்கு ஈர்த்துக்கொண்டு அவர்களுக்கு அத்துறையில் திறனை பெற்றுக் கொள்வதற்கு வசதி அளிப்பதன் ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் வெட்டு மரம் சார்ந்த உற்பத்தி துறையில் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குதல் இந்த உத்தேச பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்பதன் பிரதான நோக்கமாகும்.

மேலும், தற்போது பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக வெட்டுமரக் கைத்தொழில் துறை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. ஆகவே இலங்கையர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டத்திலான பாடநெறிகளை நடத்துவதன் ஊடாக புதிய கற்றல் வாய்ப்புகளை வழங்குதல் இந் நிலையத்தின் பணியாகும். கட்டிட மற்றும் மரத் தளபாடத் துறை சார்ந்த வெட்டுமர தொழில் நுணுக்கம் இலங்கையின் வெட்டுமரக் கைத்தொழிலில் காணப்படும் பிரதான உள்ளார்ந்த ஆற்றலாகும். ஆகவே, இக்கருத்திட்டத்தின் ஊடாக உயர்ந்த அளவிலானதொரு வருமானத்தை ஈட்டிக் கொள்வதை உறுதிப்படுத்தி உயர்ந்தளவிலான பெறுமதி சேர்த்தல் மற்றும் உயர்ந்த உற்பத்தித் திறன் சார்ந்த வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கருத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- கட்டிட மற்றும் மரத் தளபாடங்களுக்கான வெட்டுமர நுணுக்கம் போன்ற வெட்டுமர தொழில்நுணுக்கம் போன்ற ஆற்றல் விருத்தி பயிற்சிகளை வழங்குதல்
- அரச நிறுவனங்களுக்கான மரத் தளபாடங்களை உற்பத்தி செய்தல் மற்றும் வழங்குதல்
- கைத்தொழிலாளர்களுக்கு புதிய இயந்திர உபகரணங்களையும் நவீன தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்துதல்
- வெட்டு மர பதனிடல் மற்றும் சூலை மூலமாக உலர்த்திக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல்
- வெட்டுமரத் துறைக்கான புதிய உற்பத்தி மற்றும் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்

3.8.5 சேவை பெறுநரின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

தொழில்நுட்ப சேவை பிரிவிலும் அதற்கு வெளியிலும் ***374*** கைத்தொழிலாளர்களின் பங்கேற்புடன் சேவை பெறுநர்களின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட ***14*** பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

அட்டவணை*3.8.1 :* சேவை பெறுநர் களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நிதிவசதி வழங்கிய நிறுவனங்களின்
01	"யோகட்,தயிர் மற்றும் அரிசி சார்ந்த உற்பத்திகள் பற்றிய பயிற்சி"- கந்தகாடு (2018 சனவரி 3 – 5 ஆம் திகதி வரை)	புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகம்
02	"பேக்கரி உற்பத்திகள் சார்ந்த தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி" கந்தகாடு 2018 சனவரி 22 – 24 ஆம் திகதி வரை)	புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகம்
03	"சட்னி மற்றும் ஊறுகாய் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (2018 சனவரி 25)	முஸ்லிம் எயிட் ஸ்ரீ லங்கா
04	பேக்கரி உற்பத்திகள் தொடர்பான தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி – மாளிகாவத்த (2018 பெப்ரவரி 08)	முஸ்லிம் எயிட் ஸ்ரீ லங்கா

இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நிதிவசதி வழங்கிய நிறுவனங்களின்
05	பேக்கரி உற்பத்திகள் தொடர்பான தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி (கப் கேக் மற்றும் பிறந்தநாள் கேக்) மாளிகாவத்த (2018 மார்ச்சு 06)	முஸ்லிம் எயிட் ஸ்ரீ லங்கா
06	“முறுக்கு மற்றும் பயிட் மிக்ஷர் பற்றிய பயற்சி - ‘கந்தகாடு (2018 ஏப்பிரல் 6 முதல் 8 வரை)	புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகம்
07	எள்ளு சார்ந்த உற்பத்திகள் பற்றிய பயற்சி (2018 மே 30)	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
08	யோகட் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (2018 யூன் 30)	பங்களாதேஷ் கைத்தொழிலாளர்கள்
09	வலுவூட்டப்பட்ட இழைக்கண்ணாடி உற்பத்திகள் சார்ந்த தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி (2018 ஆகஸ்ட் 2018)	தேசிய இளைஞர் மன்றம்,மஹரகம
10	பால் சார்ந்த உற்பத்திகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்தீட்டம் (2018 செப்டெம்பர் 19 – 20)	தேசிய இளைஞர் மன்றம்,மஹரகம
11	“உணவுப் பொதியிடல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி - லபுதூவ (31 ஆகஸ்ட்,2018)	விவசாய விஸ்தரிப்பு அலுவலகம், மாத்தறை
12	பாடசாலை ஆசிரியர்களுக்கு “கழிவு முகாமைத்துவ தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்(29 ஒக்டோபர்,2018)	தேசிய கல்வி நிறுவகம், மஹரகம
13	பிட்சா, சீனி சம்பல் பண் மற்றும் சமோசா பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (19 நவம்பர் ,2018)	பிரதேச செயலகம், இரத்மலான
14	பாண், பிஸ் பண் மற்றம் பேஸ்ரி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (05 டிசெம்பர்,2018)	பிரதேச செயலகம், இரத்மலான

2018 ஆம் ஆண்டில் 136 மாணவர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களின் பங்கேற்புடன் ஆறு (06) கைத்தொழில் சான்றிதழ் பாடநெறிகள் பூர்த்திசெய்யப்பட்டன.

அட்டவணை 3.8.2 : கைத்தொழில் சான்றிதழ் பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இல	பாடநெறியின் பெயர்	கால இடைவெளி
01	நெட்வர்கிங் மற்றும் கணனி வன்பொருள் பற்றிய சான்றிதழ் பாடநெறி(11 ஆம் அணி)	டிசெம்பர்,2017 -09 பெப்ரவரி 2018
02	வாசனை திரவிய பதப்படுத்தல் பற்றிய சான்றிதழ் பாடநெறி(04ஆம் அணி)	27 சனவரி,2018 -07 ஏப்பிரல் ,2018
03	நெட்வர்கிங் மற்றும் கணனி வன்பொருள் பற்றிய சான்றிதழ் பாடநெறி(12 ஆம் அணி)	14 பெப்ரவரி,2018 – 30 மே,2018
04	நெட்வர்கிங் மற்றும் கணனி வன்பொருள் பற்றிய சான்றிதழ் பாடநெறி(13 ஆம் அணி)	07 யூன்,2018 -31ஆகஸ்ட் ,2018
05	போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் பற்றிய பற்றிய சான்றிதழ் பாடநெறி(02ஆம் அணி)	11 ஆகஸ்ட்,2018
06	நெட்வர்கிங் மற்றும் கணனி வன்பொருள் பற்றிய சான்றிதழ் பாடநெறி(14 ஆம் அணி)	06 செப்டெம்பர்,2018 -12 டிசெம்பர்,2018

அட்டவணை 3.8.3 : பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பத்தினை வழங்குதல்

இல	நிகழ்சித்திட்ட விபரங்கள்
01	தேசிய நீரியல் வளங்கள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட "புகையூட்டிய மற்றும் உலர்த்தப்பட்ட கருவாடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (31 யூலை 2018)
02	வ/ப அமேசன் டிரேடிங் (தனியார்) நிறுவனத்தின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட "தேயிலை பெறுமதி சேர்த்தல்"பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (29 அக்டோபர் 2018)
03	தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட " சுத்தமான தேங்காய் எண்ணெய்ப உற்பத்தி மற்றும் தர உறுதிப்படுத்தல்பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (30 அக்டோபர்2018)
04	அரிசியினால் செய்யப்பட்ட பாண், குரக்கன் பாண் மற்றும் அரிசி பிஸ் பண் பற்றிய பயிற்சி பாடநெறி (02 நவம்பர் 2018)
05	தேசிய வடிவமைப்பு நிலையத்தின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட காகிதக் கூழ் சார்ந்த உற்பத்திகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (23, நவம்பர், 2018)
06	பேராதெனிய தொழில் பயிற்சி நிலையத்தின் கலந்தாலோசனையுடன் பாவுகைக் கற்கல், அலங்கரிப்பு பொருட்கள் மற்றும் டைட்டேனியம் டையொக்சைட் சார்ந்த பூச்சாடிகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்" – கொத்மலை (19 – 20 நவம்பர் 2018)

இலக்கம்.	நிகழ்ச்சித்திட்ட விபரங்கள்
07	கைத்தொழில் அபிவிருத்தி சபையின் இறப்பர் பிரிவின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட "தும்பிலான சாடிகள்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (29 நவம்பர் 2018)
08	கண்ணோருவ, உணவு ஆராய்ச்சி பிரிவின் கலந்தாலோசனையுடன் அரிசி சார்ந்த உற்பத்திகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (18 டிசெம்பர் 2018)
09	ஹிக்கடுவ, மதுர இகோ கிராப்ட் நிறுவனத்தின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட கையிலான காகித சார்ந்த உற்பத்திகள்' பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (16, டிசெம்பர் 2018)
10	பாணந்துரை, வ/ப லங்கா படகு கட்டும் தொழில்நுட்பத்தை விருத்தியாக்குவதற்கான நிறுவனத்தின் கலந்தாலோசனையுடன் நடாத்தப்பட்ட இலங்கையின் வலுவூட்டப்பட்ட இழைக்கண்ணாடி உற்பத்திகளின் ஏற்றுமதியினை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (26 – 28 டிசெம்பர், 2018)

3.8.6 தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகளை நடாத்துதல்

தொழில்நுட்ப சேவை பிரிவிலும் அதற்கு வெளியிலும் உணவு இரசாயனப் பொருட்கள் எண்ணெய், நார் மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆகிய துணைப் பிரிவுகளின் கீழ் தொழில்நுட்பத்தை வழங்கும் 93 செயலமர்வுகள் நடாத்தப்பட்டது டன் செயலமர்வு வாயிலாக 2343 பேர் பயிற்றப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்த முன்னேற்றத்தை நோக்கும்போது 2018ஆம் நிதியாண்டில் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதன் வாயிலாக ரூபாய் 9,887,000 தொகையை ஈட்டிக் கொண்டுள்ளது.

3.9) தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் பாதணி விருத்தி நிலையம் (CDLPF)

பெருமளவு ஊழியப் படை தேவையாக இருக்கின்ற பாதணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி தொழில்துறை தெளிவாகவே தொழில் உருவாக்கம் மற்றும் கைத்தொழில் துறையின் பெறுமதி சேர்த்தலில் 40% - 75% காணப்படுகின்றது. தற்போது சந்தைப்படுத்தல் வலைப்பின்னல் உள்ளிட்ட பாதணி மற்றும் தோல்பொருள் கைத்தொழில் துறை மற்றும் அதன் துணை கைத்தொழில்களில் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகள் ஈடுபட்டுள்ளவர்கள் அண்ணளவாக 300,000 ஆவர். இலங்கையில் தோல் பொருள் உற்பத்தி துறையை அபிவிருத்தி செய்வதற்கு 1998 ஆம் ஆண்டில் தோல் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்பட்டது. பெறுமதி சேர்த்தலுடன் கூடிய ஏற்றுமதி தரத்திலான முடிவு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற தோல்பொருள் துறை அத்தியாவசியமானதொரு துறையாகும். உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு சந்தைகள் மிகவும் பொருத்தமான மற்றும் பயிற்றப்பட்ட ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு கைத்தொழிலாளர்களுக்கு உதவி வழங்கும் பொருட்டு தொல்பொருள் மற்றும் பாதணி ஆகிய இரண்டு துறைகளுக்கும் தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வினை நடாத்துவதற்கு இந்நிலையம் வசதிகளை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக இந்நாட்டின் பாதணி மற்றும் தோல்பொருள் உற்பத்தியுடன் தொடர்புடைய உள்நாட்டு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பாதணி உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு தொடர்பாக வளர்ந்துவரும் கைத்தொழிலாளர்களுக்கு தேவையான வழிகாட்டல்கள் இந் நிலையத்தினால் வழங்கப்படுகின்றது.

இப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

- அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளில் இருந்து கிடைத்த நிதி அனுராதபுரம், மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, கண்டி, கிளிநொச்சி, குருநாகல், மாத்தளை, பொலநறுவை, வவுனியா ஆகிய மாவட்டங்களின் பாதணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி கிராமங்களுக்கான தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. தனியார் துறையில் தொழில் வாய்ப்புகளை தேடி கொள்வதற்கும் சுயதொழில் வாய்ப்பு கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் நாடளாவிய ரீதியில் உள்ள 594 தொழில் முயற்சியாளர்களுக்கு 27 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன இக்கருத்திட்டத்தின் மூலம் ஈட்டி கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபாய் 4,076,000 ஆகும்.

- பாதணி துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பாதணி உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு சார்ந்த மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கருத்திட்டத்தின் கீழ் நவீன வடிவமைப்புகளையும் பாதணிகளையும் உருவாக்குவதற்கான தொழில் நுணுக்கம் பற்றிய அறிவு நிறைந்த பயிற்சியுடன் கூடிய படைப்பாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் ஈட்டி கொள்ளப்பட்ட வருமானம் ரூ. 356,000 ஆகும்.

- பைகள் உற்பத்தி கைத்தொழில் துறைக்கு பைகளை உருவாக்குதல் மற்றும் வடிவமைப்புகளை திட்டமிடுதல் பற்றிய 2பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. கிளிநொச்சி மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களின் தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றிய இந் நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக ஈட்டிக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூ. 253,000 ஆகும்.

- சிறு அளவிலான பாதணி உற்பத்தியாளர்களுக்கு காணப்படும் சந்தை வாய்ப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற உற்பத்திகளுடன் போட்டியிடக் கூடியவாறு அவர்களின் உற்பத்திகளின் தரம் மேம்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி திட்டத்திற்கு கொழும்பு கண்டி குருநாகல் மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் 119 தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றினர்.

- கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட அலுவலகங்களின் ஒருங்கிணைப்பு டன் உற்பத்தி மற்றும் முகாமைத்துவ திறன்கள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் கண்டி மற்றும் குருநாகல் பிரதேசத்தில் நடத்தப்பட்டன.

- பாதணி மற்றும் பைகள் உற்பத்தியாளர்களுக்கு தோல் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான இயந்திர உபகரணங்களை பழுதுபார்த்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் உற்பத்தியாளர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் இடையில் தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு தேவையான ஒரு அரங்கு உருவாக்கப்பட்டது.

- இலங்கையின் பாதணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து பல்வேறு குழுக்களில் கலந்துகொள்ளுதல்.

- பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவையான பிரயோக ரீதியிலான கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் அனுபவங்களை வழங்கும் பொருட்டு கட்புல கலை மற்றும் நாடகக்கலையுடன் தொடர்புடைய வளங்களையும் அறிவினையும் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டன.

- உற்பத்தியாளர்களுக்கு பதனிடல் வசதிகள் வழங்கப்பட்டதுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் பயிற்சி பெற்று பாதணி தொழில்துறையை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுடன் இருக்கின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களின் அடிப்படை மூலதனத்தில் ஆபத்து நிலை ஏற்படுவதை குறைத்துக் கொள்ளும் பொருட்டு நிவாரண வசதிகள் வழங்கப்பட்டன. இச் சேவைகளை வழங்குவதன் ஊடாக இந்நிலையம் ஈட்டிக் கொண்ட மொத்த வருமானம் ரூ. 143,000 ஆகும்.

- புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்திடம் இருந்து கிடைத்த நிதியை பயன்படுத்தி வவுனியா மற்றும் பொலநறுவை புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் பாதணி ,பைகள் மற்றும் ஏனைய தோல்பொருட்கள் உற்பத்தி பற்றிய 12 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- இராணுவ வீரர்களை பாதணிகள் மற்றும் தோல் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான கைத்தொழில் துறையுடன் இணைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு சம்பந்தப்பட்ட துறைகளில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கும் அவர்களின் ஜீவனோபாயம் மற்றும் வாழ்க்கை திறனை மேம் படுத்திக் கொள்வதற்கும் செயலமர்வுகளும் கள விஜயங்களும் நடாத்தப்பட்டன.

- இலங்கையிலுள்ள பாதணி மற்றும் தோல் பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் தொடர்பாக தரவுக் களஞ்சியமொன்று பேணிவரப்படுகின்றது.

- 2018 ஆம் ஆண்டில் இந்நிலையம் ஈட்டிக கொண்டு மொத்த வருமானம் ரூ. 6.5 மில்லியன் ஆகும்.

- பெண்களினதும் ஆண்களினதும் பாதணிகள் மற்றும் மகளிர் கைப்பைகள், பயணப் பைகள், தோல் மீது கோர்த்துக் கொண்டு செல்லும் பைகள் உள்ளிட்ட தோல் பொருட்கள் எனும் வகையின் கீழ் வடிவமைப்பு போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. வளர்ந்து வரும் இளம் வடிவமைப்பாளர்களுக்கு தங்களது ஆற்றல்களை காட்சிப் படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் இதன் பிரதான நோக்கமாகும்.

3.10) உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் (RPD & SC)

கைத்தொழிலாளர்களுக்கு உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பரிசோதனை வசதிகள், விரிவாக்கல் மற்றும் மதியுரை சேவைகள், சேவை பெருநகரின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் கலவைகளை தயாரித்தல், இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய பதனிடல் பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற சேவைகளை வழங்கும் பொருட்டு பேலியகொடை இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக பெறுமதிமிக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிக சிறப்பம்சங்களை கொண்ட இறப்பர் பதனிடல் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் உற்பத்தியில் ஈடுபடுகின்ற உற்பத்தியாளராவதற்கு வாய்ப்பு கிடைத்ததையிட்டு கைத்தொழில் அபிவிருத்தி சபை பெருமை அடைகின்றது.

இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையத்தினால் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் தகவல்கள், நிபுணத்துவம் மதியுரை சேவைகள் மற்றும் இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் தொடர்பாக மதியுரை சேவைகள் போன்றவை வழங்கப்படுகின்றன. இத்துறைக்கு திண்ம டயர், இறப்பர் கையுறைகள், இறப்பர் பேண்ட், தரை விரிப்புகள் மற்றும் வேறு பல்வேறு விதமான பொருட்களைக் கொண்ட பரந்தளவிலான வீச்சினைக் கொண்ட உற்பத்தி வகுதியொன்று உள்ளது. இத்துறையில் உள்ள பல்வேறு திறமைகளையும் அனுபவங்களையும் கொண்ட தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் வடிவமைப்பு கலைஞர்கள் காரணமாக இறப்பர் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு சந்தையில் காணப்படுகின்ற பாரிய மற்றும் போட்டி மிகு தேவைகளுக்கு ஏற்றவாறு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் இறப்பர் அபிவிருத்தி நிலையத்தின் சேவை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு விறைப்பு, அழுத்துதல், கத்தரித்தல், வளைத்தல், மற்றும் ஏனைய பரிசோதனைகளை செய்வதற்கு பொருத்தமான டென்சோ மீட்டர் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. புதிதாகப் பொருத்தப்பட்ட அதி தொழில்நுட்பத்தைக் கொண்ட பரிசோதனை இயந்திரத்தை பயன்படுத்திக்கொண்டு இறப்பர் மாதிரிகளின் விறைப்பு இயல்பினை பரிசோதிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் விபரமான தகவல்கள் அடங்கிய பரிசோதனை அறிக்கைகளை வெளியிடுவதற்கான ஆற்றல் மேம்படுத்தப்பட்டுள்ளது.



ஆதாரம்: கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சஞ்சிகை *(யூலை- செப்டெம்பர் 2018)*

அட்டவணை 3.10.1 : 2018 ஆம் ஆண்டில் நிலையத்தினால் வழங்கப்பட்ட சேவைகள்

இல.	சேவைகள்	அளவீட்டு குறிகாட்டி	எண்ணிக்கை.
(01)	தொழில்நுட்பத்தை வழங்குதல்	சேவை பெறுனர்களின் எண்ணிக்கை	17
	பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	சேவை பெறுனர்களின் எண்ணிக்கை	32
(02)	பரிசோதனை வசதிகள் (இது ஏற்றுமதி சந்தைக்கு இறப்பர் உற்பத்திகளை தயாரிக்கின்ற கைத்தொழிலாளர்களுக்கு பரிசோதனை வசதிகளை வழங்குதை உள்ளடக்குகின்றது)	தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை	134
(03)	துணை ஒப்பந்த வாய்ப்புகள்	தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை	06
(04)	உற்பத்தி விருத்தி மற்றும் பல்வகைப்படுத்தல்	தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை	19
(05)	தொழில்நுட்ப மதியுரை	எண்ணிக்கை	123

3.10.1 அபிவிருத்தி செயற்பாடுகள்:

